விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 149 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 03 சனிக்கிழமை (17.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## பொய்களால் அநுர அரசு மக்களை ஏமாற்றியுள்ளது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

பொய்களால் அநுர அரசாங்கம் நாட்டிலுள்ள 220 இலட்சம் மக்களை ஏமாற்றியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவு உப்பளத்தில் தொழிலாளர்கள் கவனயீர்ப்பு

### பொலிஸார் குவிப்பு ; போராட்டத்தைத் தடுக்க நீதிமன்ற உத்தரவும் பெறப்பட்டது



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆனையிறவு உப்பளத் தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

15ஆம் பக்கம் பார்க்க

### தமிழ் மக்களுக்கான நீதியை நிலைநாட்ட

# பொறுப்புக்கூறல் தொடர்வது அவசியம்




### மனித உரிமைகள் கண்காணிப்பகம்

(நியூயோர்க்)

தமிழ் மக்களுக்கான நீதியை நிலைநாட்ட பொறுப்புக் கூறல் செயற்திட்டம் தொடர வேண்டியது அவசியம் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது. (04ஆம் பக்கம் பார்க்க)

## சஜித்தின் அழைப்பை ஏற்ற நாமல் எம்.பி

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவரின் அழைப்பின் பேரில் இன்று நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்வதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.

குறித்த விடயத்தை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

04ஆம் பக்கம் பார்க்க

## எதிர்க்கட்சிகள் நிறுவும் உள்ளூராட்சி சபைகளுக்கு

### நிதி ஒதுக்கீடு இல்லை அமைச்சர் பிமல் சர்ச்சை



(கொழும்பு)

சூழ்ச்சித் திட்டங்கள் மூலம் எதிர்க்கட்சிகளினால் நிறுவப்படும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு

04ஆம் பக்கம் பார்க்க

## கோண்டாவிலில் குடும்பப் பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவிலில் குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் கோண்டாவில் பலாலி வீதியைச் சேர்ந்த

04ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது யார்? தமிழ்க் கட்சித் தலைவர்கள் தனித்தனியாகச் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணித் தலைவர்கள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர்களுடன் நேற்று தனித்தனியாக சந்திப்பில் ஈடுபட்டனர்.

கந்தரோடையில் சித்தார்த்தனின் இல்லத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்

15ஆம் பக்கம் பார்க்க



## இனப் படுகொலையை மறுப்பது இனவாதத்தின் வெளிப்பாடே

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இனப் படுகொலையை மறுப்பது இனவாதத்தின் வெளிப்பாடே என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் குமுதினிப் படுகொலையின் 40ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் பங்கு கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

15ஆம் பக்கம் பார்க்க

## காணி சுவீகரிப்பு வர்த்தமானியை மீளப் பெறாவிட்டால் நாட்டை உலுக்குமளவுக்கு போராட்டம் முன்னெடுக்கப்படும்

### எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"வடக்கில் மக்களின் காணி சுவீகரிப்புக்கான வர்த்தமானி மீளப்பெறப்படுவதை அரசு மே 28ஆம் திகதிக்கு முன் உறுதி செய்ய வேண்டும். தவறினால் மறுநாள் 29ஆம் திகதி

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



செம்பியன்பற்று வடக்கு

# புனித பிலிப்பு நேரியார் ஆலய

## வருடாந்த திருவிழா - 2025

- 17.05.2025 கொடியேற்றம் மாலை 5 மணியளவில் ஆரம்பமாகும்.
- நற்கருணை விழா 25.05.2025 மாலை 5 மணியளவில் ஆரம்பமாகும்.
- திருவிழா திருப்பலியானது 26.05.2025 காலை 6.30 மணியளவில் குரு முதல்வர் P.J.ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும்.
- திருவிழாவிற்கான பயண ஒழுங்குகள் யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை பேருந்துகள் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- திருவிழா வியாபாரப் பதிவுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பிக்கும். வர்த்தகப் பிரிவுக்கான தொடர்பு இலக்கம் 0764151504, 0779154413
- திருவிழா அன்று மாலை மரியசீலன் நாட்டுக்கூத்து ஆலய முன்றலில் இடம்பெறும்.
- புனிதரின் ஆசீர்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இப்படிக்கு - ஆலய பங்குத்தந்தை
மற்றும் ஆலய பங்கு மக்கள்

(C-2985)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 1963 . 12 . 08



உதிர்வு 2025 . 04 . 20

## அமரர் மாலதி அருணாசலம்

(இலங்கை மின்சாரசபை யாழ்ப்பாணம், கொள்ளுப்பிட்டி – RETIRED SYSTEM OPERATOR)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 2025.05.18 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் முகத்துவாரம் புனித தீர்த்தக்கரையிலும் தொடர்ந்து வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 2025.05.19 திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் கொழும்பு இல்லத்தில் நடைபெற்று மறுதினம் 2025.05.20 செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணியளவில் கொழும்பு 04, லோறன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் (Saraswathi Hall, Lorenz, Colombo - 04) ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கடந்த 2025.04.20 ஞாயிற்றுக்கிழமை அன்று குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த எமது அன்புத் தெய்வம் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து, நேரில் வந்தும் தொலைபேசி, சமூக ஊடகங்கள் ஊடாக ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இலங்கை மின்சாரசபை (யாழ்ப்பாணம், கொள்ளுப்பிட்டி) உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பதாகைகள், மலர் வளையங்கள் ஊடாக எமது துயரில் பங்கு கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பான மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

(4199)

241, 1/5, W.A. சில்வா மாவத்தை,
கொழும்பு – 06.

தகவல் : குடும்பத்தினர்
077 618 4441

# மரண அறிவித்தல்

மலர்வு 10 - 03 - 1947



உதிர்வு 13 - 05 - 2025

## திருமதி சந்திராதேவி உமாபதிகயிலாயநாதன்

செட்டிதறை வீதி, நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திராதேவி உமாபதி கயிலாயநாதன் அவர்கள் 13.05.2025 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் - சரஸ்வதி (பேக்கரி வல்லிபுரம்) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற ஐயாத்துரை - நாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் உமாபதி கயிலாயநாதன் அவர்களின் அன்புத் துணைவியாரும் உமாசாந்தி, துஷீதா ஆகியோரின் அன்புத் தாயாரும் சுந்தரலிங்கம், சிவயோகன் ஆகியோரின் அன்பு மாமியாரும், தினேஷ், விதுஷா, அஷ்வின், அனிஷா ஆகியோரின் பேர்த்தியும் திருமதி இந்திரா கனகராஜாவின் அன்புச் சகோதரியும் கந்தசாமி, யோகநாதன் (சின்னண்ணா), திருமதி யோகாம்பிகா முத்துக்குமாரு, இரவீந்திரநாதன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் நாளை 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக காலை 9.30 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 211 6880
021 226 3520

(C-2981)

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 - 04 - 1958



மறைவு 16 - 05 - 2025

## சோமசுந்தரம் சிவபாலன்

மணல் ஒழுங்கை, புலோலி மேற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் ஓடையை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சிவபாலன் அவர்கள் நேற்று (16.05.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான நாகப்பர் - மகேஸ்வரி தம்பதியரின் மூத்த மருமகனும் சாரதாதேவி அவர்களின் அன்புக் கணவரும் கிரிசாந்தன் (ஆசிரிய வளவாளர் - கணினி வள நிலையம், வடமராட்சி), ஆராதனா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - விவசாயக்கல்லூரி, பரந்தன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பானுயா, ரகுராம் (உரிமையாளர் - வண்ணமயில் புடைவையகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பூர்விகன், பிருத்விகன், பிரஷான், பவந்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் பாலகிருஷ்ணன், இந்திராதேவி, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலகிருஸ்னன் - மகேஸ்வரி தம்பதியரினதும் விஜயகுமாரன் - மல்லிகாதேவி தம்பதியரினதும் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விநாயகர் வீதி,
அல்வாய் தெற்கு, அல்வாய்.

021 226 4671
077 211 1148

(C-2980)

தகவல் :
குடும்பத்தினர்

# தமிழினப் படுகொலையை பிரான்ஸ் அங்கீகரிக்க வேண்டும்!

## முன்னாள் எம்.பி விக்னேஸ்வரன் கோரிக்கை



**(பிரான்ஸ்)**

**இலங்கையில் தமிழ் இனப்படுகொலையை பிரான்ஸ் அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் என வலியுறுத்துவதாக தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

பிரான்ஸ் பாராளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தமிழர்களுக்கான பிரான்ஸ் உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கருத்துரைக்கும் காணொளி ஒன்று இந்த கூட்டத்தில் ஒளிபரப்பப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த மத குருமார்களால் சிங்களமயமாக்கலும் பௌத்த மயமாக்கலும் இடம்பெறுகிறது.

உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து 15 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் இன்றும் வடக்கு கிழக்கில் இராணுவத்தின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

குறிப்பாக 2 அல்லது 3 தமிழர்களுக்கு ஒரு இராணுவ உத்தியோகத்தர் உள்ளார். அத்துடன் வடக்கு கிழக்கில் இராணுவம் கட்டுப்படுத்தும் நிலத்தின் அளவும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

தமிழர் பகுதியில் அவ்வப்போது சிங்கள குடியேற்றங்கள் அதிகரித்து வருகின்றன என்றும் அவர் தமது காணொளியில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் தனித்துவம் தொடர்ந்தும் உறுதி செய்யப்படுவதற்கான சில காரணங்களையும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

பிரான்சில் உள்ள 47 மாநகர சபைகளில் இலங்கையில் தமிழ் இனப்படுகொலை நடந்ததை அங்கீகரிக்கும் வகையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அத்துடன் இந்தியாவின் தமிழக மாநிலமும் கனேடிய பாராளுமன்றமும் இவ்வாறான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளன.

எனவே ஆர்மெனியா மற்றும் ருவாண்டா ஆகிய நாடுகளில் இனப்படுகொலை இடம்பெற்றமையை அங்கீகரித்ததை போன்று இலங்கையிலும் இனப்படுகொலை இடம்பெற்றது என்பதை பிரான்ஸ் அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் என வலியுறுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# தமிழினப் படுகொலைக் கொடூரங்கள் மீண்டும் இடம்பெறக்கூடாது!

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் கோரிக்கை

(வோஷிங்டன்)

தமிழ் இனப்படுகொலையின் போது இடம்பெற்ற கொடூரங்கள் மீண்டும் இடம்பெறாததை உறுதி செய்யவேண்டும் என அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் டொன் டேவிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கையில் தமிழர் இனப்படுகொலையின் 16 வருடத்தினை நினைவுகூருகின்றோம்

இன்றும் என்றும் நாங்கள் ஈழத்தமிழர்கள் சமூகத்தினர், உயிர்பிழைத்தவர்கள், அவர்களுடைய குடும்பத்தவர்கள், தொடரும் ஒடுக்குமுறைகளினை எதிர்கொண்டுள்ளவர்களுடன் ஐக்கியமாக இருக்கின்றோம்.



இலங்கை அரசாங்கத்திடமிருந்து அவர்கள் தங்கள் துயரங்களிற்கு நீதியைக் கோரும் வேளை நாங்கள் தமிழ் மக்கள் குறித்தும் அவர்கள் அனுபவித்த விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

அனைவரினது உரிமைகளையும் கௌரவத்தையும் மதிக்கும் அமைதி தீர்விற்காக நாங்கள் பரப்புரை செய்ய வேண்டும்,

தமிழ் இனப்படுகொலையின் போது இடம்பெற்ற அட்டூழியங்கள் மீண்டும் இடம்பெறாததை உறுதி செய்யவேண்டும்.

மிகமோசமான துன்பத்தின் மத்தியில் தமிழ் சமூகம் வெளிப்படுத்திய மீள் எழுச்சித்தன்மை நீதிக்கான அவர்களின் உறுதிப்பாடு அசைக்க முடியாத உணர்வு ஆகியவற்றிற்கான வெளிப்பாடாகும்.

நாங்கள் அனைவரும் ஈழத்தமிழர்களிற்கு ஆதரவாக யிருப்போம் என அவர் தெரிவித்தார். (நி-8)

# போதைப்பொருள் கடத்தல் மூவருக்கு மரண தண்டனை!

(கொழும்பு)

ஹெரோயின் வைத்திருந்தமை மற்றும் அதனை கடத்தியமை போன்ற குற்றச்சாட்டுகளுக்காக குற்றம் நிரூபிக்கப்பட்ட மூன்று நபர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்தது.

இவர்கள் மூவரும் கடந்த 2018 ஆம் ஆண்டு பேருவளையைச் சுற்றியுள்ள கடற்பரப்பில் பல நாட்கள் மீன்பிடிக் கப்பலில் 179 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கடத்தலின் போது கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையில், இந்த சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டிருந்த மேலும் ஐந்து பிரதிவாதிகளை விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே உத்தரவிட்டார். (நி-8)

## தூர இடங்களுக்கான பேருந்து சேவைகளின் போது

# குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் சாரதிக்கு இருக்க வேண்டும்

(கொழும்பு)

தூரப் பிரதேசங்களுக்கான பேருந்து சேவைகளின் போது சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டுமென முன்னதாக சுற்று நிரூபம் ஒன்றினூடாக அறிவிக்கப்பட்டிருந்ததாக அதன் பிரதி பொது முகாமையாளர் குறிப்பிட்டார்.

குறைந்தபட்ச 3 வருட அனுபவமுள்ள சாரதியை இதற்காக ஈடுபடுத்துதல், போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கு முன்னதாக பேருந்தின் நிலைமை தொடர்பில் பரிசோதித்து அறிக்கையைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அதற்கான பயன அட்டவணையைத் தயாரிப்பதற்கான முறைமை உள்ளிட்ட சில நிபந்தனைகள் அந்த சுற்று நிரூபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தூர பிரதேச பேருந்து சேவைகளில் ஈடுபடுத்துவதற்கு முன்னதாக குறித்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

குறித்த நிபந்தனைகள் உரிய முறையில் பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக இலங்கை போக்குவரத்துச் சபையின் 12 பிரதேச பொறியியலாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்கு வரத்து சபையின் பிரதி பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (நி-3)

# வாகன இலக்கத்தகடுகள் பற்றாக்குறையால் தாமதம்

(கொழும்பு)

இலங்கையின் புதிய வாகனப் பதிவு செயல்முறையானது இலக்கத் தகடுகளின் பற்றாக்குறையால் தாமதங்களை எதிர்கொள்வதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

புதிய வாகன உரிமையாளர்களுக்கு இது தொடர்பில் வழங்கப்பட்ட கடிதத்தில், பற்றாக்குறை காரணமாக வாகன இலக்கத் தகடுகள் விநியோகம் தாமதமாகும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான தற்காலிக தீர்வாக வாகன எண்ணை உள்ளடக்கிய மற்றும் பதிவு செல்லுபடியாகும் என்பதை உறுதிப்படுத்தும் கடிதத்துடன் வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு திணைக்களம் தற்காலிக அனுமதியை வழங்கியுள்ளது.

இந்த தற்காலிக நடவடிக்கை ஏப்ரல் 28 முதல் அமுலுக்கு வருவதாக மோட்டார் வாகனத் திணைக்களம் வெளியிட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், வாகன இலக்கத் தகடுகள் பற்றாக்குறை எப்போது தீர்வுக்கு வரும் என்பது அதில் குறிப்பிடவில்லை. (நி-8)

# ஆசிய கோப்பைக்கான ஹொக்கி பங்கேற்குமா பாகிஸ்தான்?

12 ஆவது ஆசியக் கோப்பை ஹொக்கிப் போட்டி ஆகஸ்ட் 27 முதல் செப்டம்பர் 7 வரை பீகார் மாநிலம், ராஜ்கிரில் நடைபெறவுள்ளது.

நெதர்லாந்து, பெல்ஜியத்தில் அடுத்த ஆண்டு நடைபெறும் உலக கோப்பைக்குத் தகுதிப் போட்டியாக இருப்பதால் இது முக்கியத்துவம் பெறுகிறது.

இந்தியா, ஜப்பான், தென் கொரியா, சீனா, மலேசியா, ஓமான், சீன தைபே ஆகிய அணிகளுடன் பாகிஸ்தானும் இந்தப் போட்டியில் பங்கேற்பது வழக்கம். ஆனால், தற்போதைய சூழலில் பாகிஸ்தான் இந்தப் போட்டியில் பங்கேற்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானுடன் எந்தவொரு உறவும் இருக்கக்கூடாது என பல்வேறு தரப்பினரும் கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

ஆனாலும் இந்த விவகாரத்தில் தற்போதைய நிலையில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் மத்திய அரசின் அறிவுறுத் தலின் பேரில் இந்த விவகாரத்தில் முடிவு எடுக்கப்படும் என்றும் இந்தியா ஹொக்கி அமைப்பு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் அணி இந்தியா வருவதற்கு மத்திய அரசு அனுமதி மறுத்தால் 7 அணிகளுடன் போட்டியை நடத்துவதா? அல்லது பாகிஸ் தானுக்குப் பதில் வேறு அணியை சேர்ப்பதா? என்பது குறித்து ஆசிய ஹொக்கி சம்மேளனம் அப்போது முடிவு எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் மாநிலம் பதான்கோட் விமானத் தளத்தில் 2016 இல் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய சில மாதங்களுக்குப் பிறகு இந்தியாவில் நடைபெற்ற ஜூனியர் உலக கோப்பை ஹொக்கிப் போட்டியில் பாகிஸ்தான் அணி பங்கேற்க வில்லை. அதற்கு பதிலாக மலேசியா கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. (நி)

# ஐ.பி.எல் போட்டிகளில் இருந்து மொயீன் அலி விலகல்



இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் போர்ப்பதற்றம் நிலவியதை அடுத்து கடந்த 8ஆம் திகதி தரம்சாலாவில் பஞ்சாப்-டில்லி அணிகளுக்கு இடையில் நடைபெற்ற போட்டி பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியதால், பாதியிலேயே நிறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஐபிஎல் ரி-20 கிரிக்கெட் தொடர் உடனடியாக நிறுத்தப்பட்டது. வெளிநாட்டு வீரர்கள் பத்திரமாக சொந்த நாடு திரும்பினர்.

பின்னர் இந்தியா- பாகிஸ்தான் இடையில் கடந்த 10ஆம் திகதி போர் நிறுத்தம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து நாளை 17ஆம் திகதி மீண்டும் ஐ.பி.எல் தொடர் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் வெளிநாட்டு வீரர்கள் ஐ.பி.எல் தொடரில் விளையாடுவதற்காக இந்தியா திரும்பி வருகிறார்கள். பிளேஆஃப் சுற்றுக்கு வாய்ப்பு இல்லாத அணிகள் இன்னும் 2 முதல் 3 போட்டிகளில் மட்டுமே விளையாட வேண்டியுள்ளது.

இதனால் ஆடும் லெவனில் இடம் கிடைக்காத வெளிநாட்டு வீரர்கள் உட்பட சில வீரர்கள் மீண்டும் ஐபிஎல் தொடரில் இணைய ஆர்வம் காட்டவில்லை எனக் கூறப்படுகிறது. இதனால் சொந்தக் காரணத்தை காட்டி விலக இருப்பதாக தெரிகிறது.

அந்த வகையில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடி வரும் மொயீன் அலி, சொந்தக் காரணத்திற்காக எஞ்சிய போட்டிகளில் இருந்து விலகியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. ஏற்கனவே டில்லி அணியின் மெக்கர்க் ஐ.பி.எல் தொடரில் இருந்து விலகியுள்ளார். புள்ளிகள் பட்டியலில் கே.கே.ஆர் 12 போட்டிகளில் விளையாடி 5இல் வெற்றி பெற்று 6ஆவது இடத்தில் உள்ளது. 17ஆம் திகதி ஆர்.சி.பியையும், 15ஆம் திகதி சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியையும் எதிர்கொள்ள இருக்கிறது.

இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்றால் மட்டுமே அரையிறுதிக்கான வாய்ப்பைத் தேட முடியும். (நி-8)

## பொறுப்புக்கூறல்...

இலங்கையின் மூன்று தசாப்த கால யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நாளைய தினத்துடன் (18) 16 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில், அதனை முன்னிட்டு மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

இலங்கை அரசாங்கத்தினால் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் தோற்கடிக்கப்பட்டு, நாட்டில் 26 வருடகாலம் நிலவிய யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு நாளைய தினத்துடன் (18) 16 வருடங்கள் பூர்த்தியடைகின்றன. ஆனால் யுத்தம் முடிவுக்கு வந்து நீண்டகாலம் கடந்திருக்கின்ற போதிலும், பாதிக்கப்பட்ட தமிழ்ப் பெண்களின் நீதிக்கான போராட்டம் இன்னமும் தொடர்கிறது.

யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பினரும் எண்ணிலடங்கா மீறல்களில் ஈடுபட்டனர். யுத்தத்தின் இறுதி வாரங்களில் அரச படையினரால் பிடிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தை சேர்ந்த பெண் போராளிகள் மற்றும் தமிழ்ப் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். இராணுவத்தினர் அதனை தமக்கான யுத்த வெற்றிக் கேடயங்களாகக் கருதி புகைப்படங்கள் எடுத்தும், ஒளிப்பதிவு செய்தும் வைத்திருந்தனர். அவற்றில் கொல்லப்படுவதற்கு முன்னர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கக்கூடும் எனக் கருதக்கூடிய வகையில் சடலம் கண்டறியப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தின் செய்தி வாசிப்பாளர் இசைப்பிரியாவின் புகைப்படமும் உள்ளடங்குகிறது.

இவ்வாறு அரச அனுசரணையுடன் தமிழர்களுக்கு எதிராக பாலியல் அத்துமீறல்கள் நிகழ்த்தப்பட்டன. யுத்தத்தின் பின்னர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ்ப் பெண்கள் மற்றும் ஆண்கள் பலர் பாதுகாப்புப் படையினரால் பாலியல் ரீதியிலான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இருப்பினும் இலங்கையில் ஆட்சி பீடமேறிய அரசாங்கங்கள் பாலியல் ரீதியான வன்முறைகளிலும் சட்ட விரோத படுகொலைகள், சித்திரவதைகள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளிட்ட மிக மோசமான மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்ட பாதுகாப்புப் படையினரைப் பொறுப்புக்கூறச் செய்வதற்குத் தவறியிருக்கின்றன.

அதேவேளை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வட, கிழக்கு மாகாணங்களில் தற்போது முன்னெடுக்கப் பட்டுவரும் இராணுவமயமாக்கல் நடவடிக்கைகள், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த முன்னாள் பெண் போராளிகள் மீண்டும் பாலியல் அத்துமீறல்களுக்கு உள்ளாக்கப்படக்கூடிய அச்சுறுத்தலைத் தோற்றுவித்துள்ளது.

உண்மையையும், சர்வதேச நீதியையும் கோரி பல வருடகாலமாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார் மற்றும் மனைவிமார் உள்ளிட்ட பெண்கள் அச்சுறுத்தல்களுக்கும், மீறல்களுக்கும், பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர்.

இலங்கையில் குற்றவாளிகள் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு தொடர்வதன் காரணமாக பாதிக்கப்பட்ட தமிழர்கள் உள்ளக நீதிப்பொறிமுறையில் நம்பிக்கை இழந்திருப்பதுடன் அந்நீதியை வேறு இடங்களில் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். அதேபோன்று சர்வதேச குற்றங்களில் ஈடுபட்ட இலங்கையை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு சகல வடிவங்களிலுமான நீதி அதிகார வரம்பெல்லையைப் பயன்படுத்த வேண்டியது அவசியம் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இவ்வாறானதொரு பின்னணியில் குற்றமிழைத்தோருக்கு எதிராக வழக்குத்தொடர்வதற்கும், பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கக்கூடிய ஆதாரங்களைத் திரட்டுகின்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் "இலங்கை பொறுப்புக் கூறல் செயற்திட்டம்" மாத்திரமே தற்போது எஞ்சியிருக்கின்ற ஒரே யொரு வழியாகும்.

அச்செயற்திட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கூட்டத் தொடரில் புதுப்பிக்கப்படுவதுடன், அதனை இலங்கை அரசாங்கம் ஆதரிக்க வேண்டும். இசைப்பிரியா போன்ற பெண்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு அச்செயற்திட்டம் தொடரவேண்டியது மிக அவசியமாகும் என அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-4,7)

## குடும்பப் பெண்...

சுப்பிரமணியம் நாகேஸ்வரி என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

உயிரிழப்புத் தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,4)

## சஜித்தின்...

பாராளுமன்ற விவகாரக் குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து நேற்று (16) ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்ட விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் நியமனம் தொடர்பான கலந்துரையாடல் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-4,7)

## எதிர்க்கட்சிகள்...

அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யாது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கூட்டம் ஒன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் தவிர்ந்த ஏனையவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாது.

ஊழல் மோசடிகளை மேற்கொள்வோரினால் ஆட்சி செய்யப்படும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய அரசாங்கத்திற்கு எவ்வித அவசியமும் இல்லை.

சிறு சிறு குழுக்கள் ஒன்றிணைந்து ஆட்சியை நிறுவுவதற்கு மக்கள் ஆணையளிக்கவில்லை.

அவ்வாறு சிறு சிறு குழுக்கள் ஒன்றிணைந்து ஆட்சியை அமைப்பது ஜனநாயக விரோதமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-4,7)

# கிராமிய அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்குங்கள்

## மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத்து

**(கொழும்பு)**

**வரவுசெலவுத் திட்டத்தில் கிராமிய அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியை உரிய கால எல்லைக்குள் சரியான முறையில் செலவிட வேண்டும் என அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

இந்நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்தை உயிர்பிக்கச் செய்வதன் மூலம் கிராமிய அபிவிருத்திக்கு செயற்திறன்மிக்க வகையில் பங்களிப்பு வழங்குமாறும் அறிவுறுத்தினார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

2024 வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டில் உற்பத்திப் பொருளாதாரம் தொடர்பான திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்ததுடன், மாவட்ட மட்டத்தில் ஒதுக்கப்பட்ட அந்த நிதி ஒதுக்கீடுகளை விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் மற்றும் திறமையின்மைகள் குறித்தும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.



கடந்த சில வருடங்களாக கிராமப்புறங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இன்மையால் கிராமப்புற மக்கள் ஏராளமான பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

மேலும், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடத்தும்போது ஒவ்வொரு மாவட்டத்தின் அபிவிருத்தித் தேவைகளுக்கும் முன்னுரிமை அளித்து, துறைசார் அமைச்சர்களையும் அதில் இணைத்துக் கொள்ளுமாறு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களுக்கு ஜனாதிபதி மேலும் அறிவுறுத்தினார். (நி)

## மன்னார் சௌத்பாரில் கனிய மணல் அகழ்வு குறித்த திடீர் கலந்துரையாடல்

### எதிர்ப்பு தெரிவித்த மக்கள்

(மன்னார்)

மன்னாரில் கரையோரப் பகுதிகளில் கனிய மணல் அகழ்வுக்கு மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில் மன்னார் தீவுப் பகுதியில் கனிய மணல் அகழ்வு முன்னெடுப்பது தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னார் சௌத்பார் பகுதியில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவி பணிப்பாளர் ரமேஷ் கன்னா தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் கனிய மணல் அகழ்வை முன்னெடுக்கும் நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் அப்பிரதேசத்தில் உள்ள மீனவ அமைப்புகளின் பிரதி நிதிகள் மற்றும் அப்பகுதி மக்களும் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடல் திடீரென ஏற்பாடு செய்யப்பட்டமை தொடர்பாக தமது விசனத்தை தெரிவித்ததோடு, இப்பிரதேச மக்களின் முழுமையான சம்மதம் இன்றி இப்பிரதேசத்தில் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்க தாம் அனுமதிக்க மாட்டோம் என குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த கூட்டத்தில் கலந்து கொண்ட பலர் கனிய மணல் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் குறித்த கூட்டம் தீர்மானம் இன்றி நிறைவடைந்துள்ளது. (நி-285)



டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நேற்றைய தினம் கரைச்சி சுகாதார பிரிவுக்கு உட்பட்ட கிளிநொச்சி நகரப் பொது சுகாதார பரிசோதகர் கஜேந்திரா தலைமையில் இடம்பெற்றது. (படம்: தேவானந்தன்)

# இராசிபலன்

17.05.2025
வைகாசி 03, சனிக்கிழமை
பஞ்சமி பின்னிரவு 3.30 மணிவரை

பூராடம் பிற்பகல் 3.35மணிவரை
சுபநேரம்2.53-4.23மணிவரை
இராகுகாலம்8.53-10.23மணிவரை

சந்திராஷ்டமம்-

**வளவன்**

**மேஷம்** நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், உடல் நலன் சீராக்கி உற்சாகம் தோன்றும், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம்.

**கடகம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உறவினர்கள் சந்திப்பால் உற்சாகம் கூடும், பொது வாழ்வில் சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உடன்பிறந்தவர்கள் வழியில் உற்சாகம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**மகரம்** ஊர் மாற்றம் இட மாற்றம் என்பன இடம் பெறலாம், இறைவழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள், சுப காரிய செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** உறவினர்கள் நண்பர்களுடன் பேசும் போது நிதானம் தேவை, தேவையற்ற விரயங்கள் மேலோங்கும் நாள், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், ரோக பயமுண்டு.

**சிம்மம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிள்ளைகள் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** உங்களின் வார்த்தைக்கு மதிப்புக் கிடைக்கும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாயப்புண்டு, பணபுழக்கம் கூடும்.

**கும்பம்** நண்பர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்

**மிதுனம்** சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை கூடும், அலங்காரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**கன்னி** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெற்றோர்கள் மீது பிரியம் கூடும், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், கற்பனை மிகுதியான நாள், பிறர் உதவியுண்டு.

**மீனம்** வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வந்து சேரலாம், போசன நன்மையுண்டு.

**தேவையற்ற பணம் பல பாவங்களை செய்ய உன்னைத் தூண்டும்.**

### விளைச்சல் பெறும் காலங்களில்

# இறக்குமதிகளால் பாதிப்படையும் உள்ளூர் உற்பத்திகள்

## அச்சுவேலி விவசாயிகள் கவலை

(யாழ்ப்பாணம்)

**வெங்காய, உருளைக்கிழக்கு உற்பத்திகளில் விளைச்சலைப் பெறுகின்ற காலத்தில் இவற்றை அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதனால் தமது உற்பத்திகள் கேள்விகளற்று போய் விடுகின்றது என அச்சுவேலி, பத்தைமேனி விவசாயிகள் தெரிவித்தனர்.**

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பத்தைமேனி பொது நோக்கு மண்டபத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது இவ்வாறு தெரிவித்தனர்.



இதன் போது விவசாயிகள் கடந்த காலங்களில் தமக்கு உரமானியம் விவசாய உள்ளீடுகளுக்கான மானியம் போன்றவை வழங்கப்பட்டது.

ஆனால் இன்று எந்த வகை யான மானியங்களும் வழங்கப்படுவதில்லை. அத்துடன் வழங்கப்படும் விவசாய உள்ளீடுகள், கிருமி நாசினிகள் தரமற்றவை என்றும் இதனால் தமது உற்பத்திகளில் பாரிய மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடுவதாகவும் எடுத்துரைத்தனர். இதற்கு பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் விவசாயிகளின் உற்பத்திகள் பாதிப்படைவது குறித்து பாராளு மன்றத்தில் நிச்சயமாக எடுத்துரைப்பேன் எனத் தெரிவித்தார். (நி-3)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழப்பாணம் திருநெல்வேலி தெற்கு, பரமேஸ்வராச் சந்தியிலுள்ள அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தலைவர் பொ. கேசவராஜ் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்விற்கு பொதுச் சபை உறுப்பினர்கள், மஹோற்சவ உபயகாரர்கள் மற்றும் ஏனைய உபயகாரர்கள் அனைவரையும் பங்கு பற்றுமாறு பரிபாலன சபையின் செயலாளர் ச.சசிகுமார் தெரிவித்துள்ளார். (3-8)

## ஞானச்சுடர் மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச் சந்நியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் சந்நியான் ஆச்சிரமத்தினால் மாதாந் தம் வெளியிடப்படும் ஆன்மிக சஞ்சிகை யான ஞானச் சுடரின் 328 ஆவது மலர் வெளிவந்துவிட்டது.

இம் மலரில் பொருளடக்கங்களாகக் கடவுள் நம்பிக்கை, பகவத்கீதையின் தத்துவம், காலம் எனக்கொரு பாட்டை... போன்ற பல ஆன்மிக சிந்தனைகளை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்துள்ளது. (3-8)



யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலய பூங்காவனத் திருவிழா நேற்று முன்தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது.



இலங்கை தமிழரசுக்கட்சியின் ஏற்பாட்டில் சங்கானை நகரப் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 400 | 450 | 500 | 450 |
| உருளைக்கிழங்கு | 240 | 230 | 230 | 200 | 250 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 200 | 150 | 400 |
| தக்காளி | 800 | 800 | 1000 | 600 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 300 | 350 | 200 |
| கோவா | 450 | 500 | 600 | 350 | 600 |
| கரட் | 900 | 900 | 1200 | 900 | 1000 |
| பூசணி | 180 | 180 | 180 | 180 | 200 |
| புடோல் | 250 | 300 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 300 | 150-320 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 150 | 180 | 150 | 140 |
| பாகற்காய் | 800 | 700 | 1000 | -- | 1000 |
| வெண்டக்காய் | 150 | 180 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 250 | 200 | 320 |
| பயற்றங்காய் | 250 | 300 | 600 | 200 | 400 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 210 | 400 |
| பீற்றூட் | 600 | 500 | 600 | 500 | 700 |
| கறிமிளகாய் | 800 | 800 | 600 | 450 | 1000 |
| முருங்கைக்காய் | 1500 | 2000 | 2000 | 2000 | 1500 |
| போஞ்சி | 800 | 800 | 1000 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 400 | 350 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 180 | 120-160 | 150 | 100 | 150 |
| தேசிக்காய் | 300 | 450 | 400 | 350-420 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 250 | 120-220 | 200-240 |
| இராசவள்ளி | 600 | 700 | 1000 | 450 | 700 |
| வெங்காயப்பூ | -- | 800 | 600 | 700 | 600 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- | -- |

## யோகா பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகவுள்ளது.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளித்தொல்லை நீங்க, தைராய்டு பிரச்சினை தீர, எளிய முறை உடற் பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப் படும்.

பயிற்சிகளை தமிழ் நாட்டிலிருந்து வருகைதந்துள்ள மனவளக்கலைப் பேராசிரியர் சு.காமாட்சி அவர்கள் வழங்குவார்கள். தொடர்புகளுக்கு 021 222 2772, 076 857 1395. (3-8)

## முகாமைத்துவ புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீட புதுமுக மாணவர்களுக்கானதிசைமுகப்படுத்தல் நிகழ்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் என்.கெங்காதரன் தலைமையில், கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (3-8)

# பழங்களுடன் சென்ற 'கப்' ரக வாகனம் விபத்து

(ஹற்றன்)

ஹற்றன்-கொழும்பு பிரதான வீதியில் கப் வாகனம் ஒன்று பாதையை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் தேயிலைத் தோட்டத்திற்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி உள்ளது.

இந்த விபத்து நேற்று அதிகாலை 4 மணியளவில் ஹற்றன் - ஸ்த்ரெதன் தோட்டப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

ஹற்றன் பகுதியில் உள்ள தோட்டங்களில் இருந்து ஆனைக்கொய்யாப் பழங்களை வாங்கி கொழும்புக்கு விற்பனைக்காகக் கொண்டு செல்லும்போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் கப் வாகனத்தின் சாரதியும் அதில் பயணித்தவர்களில் ஒருவரும் காயமடைந்து வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்ற போது கப் வாகனத்தில் நான்கு பேர் பயணித்ததாக விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். (நி-8)

# புதிய மைல்கல்லை எட்டிய சூரிய மின் உற்பத்தி

## மின்சார சபை பெருமிதம்

(கொழும்பு)

இலங்கை முழுவதும் மேற்கூரைகளில் அமைக்கப்பட்ட சூரிய மின்சக்தி திறன், மே 1 ஆம் திகதி வரை மெகாவோட் 1,700 என்ற எல்லையை அடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர்கள் தெரிவித்ததாவது,

மேற்கூரைகளில் அமைக்கப்பட்ட சூரிய மின்சக்தி, இந்நாட்டில் முக்கியமான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மைல்கல்லை எட்டியுள்ளது.

நாட்டின் மக்கள், வணிகங்கள் மற்றும் நிறுவனங்களின் பசுமையான மற்றும் நிலையான எரிசக்தி எதிர்காலத்திற்கான அர்ப்பணிப்பு இந்த முன்னேற்றத்தில் பிரதிபலிக்கிறது என மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் கவனம் செலுத்தியமை தொடர்பாக, மின்சார சபை அனைத்து சூரிய மின்சக்தி உற்பத்தியாளர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. (நி-8)

# இலங்கையிலிருந்து மின்னணு உற்பத்தி பொருட்கள் இறக்குமதி

## ஜப்பான் ஆர்வம்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து இலத்திரனியல் மற்றும் இலத்திரனியல் உற்பத்தி பொருட்களை இறக்குமதி செய்ய எதிர்பார்ப்பதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

ஜப்பானின் வெளியுறவு வர்த்தக ஒழுங்கமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி ஹிரோகி ஓய் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்குத் தேவையான இலத்திரனியல் மற்றும் இலத்திரனியல் உற்பத்தி பொருட்களுக்கான அதிக வாய்ப்புள்ள நாடாக இலங்கை பார்க்கப்படுகிறது.

ஜப்பானின் தொழில்முறையுடன் இலங்கையின் தொழில்முறையும் ஒத்துச் செல்வதாக அமைகிறது.

அத்துடன் இலங்கையில் உற்பத்திச் செலவுகளும் குறைவாக இருக்கிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)


## ஆதனங்களை மதிப்பீடு செய்தல் சம்பந்தமான அறிவித்தல்

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

அரசாங்க மதிபீட்டு திணைக்களத்தினால் எமது பிரதேச சபைக்குட்பட்ட சகல ஆதனங்களின் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் முதற்கட்டமாக சங்கானை உப அலுவலகத்திற்குட்பட்ட ஆதனங்களின் மீள் மதிப்பீடானது 2025.05.21 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பிக்கப்பட சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து அராலி உப அலுவலகம், வட்டுக்கோட்டை உப அலுவலகம் மற்றும் சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட சகல ஆதனங்களும் மீள் மதிப்பீடு செய்யப்படவுள்ளன என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

எனவே விலைமதிப்பீட்டுத் திணைக்களமும் எமது பிரதேச சபையும் இணைந்து மேற்கொள்ளும் குறித்த ஆதன மீள்மதிப்பீட்டிற்கான ஒத்துழைப்பினை வழங்குமாறு எமது பிரதேச சபைக்குட்பட்ட வீட்டுடமையாளர்கள் , வியாபார நிறுவனங்களின் உடமையாளர்கள், பாடசாலைகள், வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் அனைத்து ஆதன உடமையாளர்களும் ஒத்துழைப்பு வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**சண்முகராஜா பாலரூபன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**

(C-2974)



# UNIVERSITY OF JAFFNA INVITATION FOR BIDS

## Provision of Private Security Services for the University of Jaffna -2025/2026

1. The Chairman, Department Procurement Committee of University of Jaffna invites sealed Bids from eligible and qualified bidder for provision of a Private Security Service for the University of Jaffna.

2. Period of contract shall be a calendar year subject to a performance evaluation period of 90 days from the start date.

3. Companies/ Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidence should be provided with Bids.

   3.1 To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have its registered office or sub office in Northern Province (closer to main premises) and shall possess the valid registration in the Ministry of Defence, Public Security, Law and Order, Business registration and a copy of the valid registration certificate in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance should be attached with the Bid.

   3.2 Average of annual volume of security service contracts performed in the last 3 years should be at least **Rs. 75 Million**

   3.3 Must have satisfactorily carried out at least one Security service contract to a Government Department/ Corporation/ University during the last 3 years for not less than **Rs. 25.0 Million.**

4. The Company/ Firm must have satisfactorily carried out at least two security service contracts which included a minimum work force of **175 security staff** in each contract for any Government Department/ Corporation/ University or Institutions over the last three years. Certified copies of letters issued by such clients should be attached with the Bid.

5. Interested Bidders may inspect the Bidding documents and obtain further information from the Senior Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day.

6. A complete set of Bidding Documents in English Language could be purchased by interested Bidders on submission of a written application to the Senior Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day up to **5th June 2025** upon the submission of receipt for the payment of non-refundable Tender Fee of **Rs. 5000.00.** The payment should be made in cash to the Shroff, University of Jaffna or the payment shall be deposited in favour of Bursar, **University of Jaffna at the University of Jaffna Branch People's Bank Account Number 970000060000276** at any Branch of People's Bank.

7. Duly completed sealed Bids shall be sent either by registered post to Chairman, Department Procurement Committee, University of Jaffna or deposited in the Tender Box maintained at Registrar's office on or before 2.00 p.m. **on 12th June 2025**. Late Bids or incomplete Bids will be rejected.

8. Bids will be opened soon after closing time in the presence of the Bidders or their representatives who choose to attend.

9. All Bids shall be accompanied by a Bid Security (Unconditional Guarantee) of Rupees Five hundred thousand only **(Rs. 500, 000.00).** (Valid up to 7th October 2025)

10. Pre-bid meeting will be held at ***10.00 am on 03 rd June 2025*** in the board room of the University of Jaffna, Thirunelvely.

**The Chairman/ Department Procurement Committee**
**University of Jaffna,**
**Thirunelvely,**
**Jaffna.**
**17.05.2025**

(C-2978)

## பாரதம்

# ஜெலன்ஸ்கியை சந்தி… மறுத்த புடின்





(அங்காரா)

**துருக்கியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வோலோடிமிர் ஜெலன்ஸ்கியை நேருக்கு நேர் சந்திக்கும் சவாலை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நிராகரித்தார்.**

அதற்குப் பதிலாக இரண்டாம் நிலைக் குழுவைத் திட்டமிட்ட அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு அனுப்பினார்.

அதே நேரத்தில் உக்ரைன் ஜனாதிபதி தனது பாதுகாப்பு அமைச்சர் குழுவிற்கு தலைமை தாங்குவார் எனத் தெரிவித்தார்.

2022 மார்ச் மாதத்திற்கு பின்னர், இரு தரப்பினருக்கும் இடையிலான முதல் நேரடிப் பேச்சுவார்த்தை இதுவாகும்.

துருக்கிய ரிசார்ட்டான அன்டால்யாவில் செய்தியாளர்களிடம் அவர், இஸ்தான்புல்லில் நடைபெறும் உக்ரைன் பேச்சுவார்த்தைகளுக்கு வோஷிங்டன் "அதிக எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கவில்லை" எனத் தெரிவித்தார்.

ரஷ்ய தூதுக்குழுவின் தலைவரான ஜனாதிபதி ஆலோசகர் விளாடிமிர் மெடின்ஸ்கி, நேற்று வெள்ளிக்கிழமை இஸ்தான்புல்லில் அந்நாட்டு நேரப்படி காலை 10 மணிக்கு விவாதங்களின் தொடக்கத்திற்கு உக்ரைனின் பிரதிநிதிகள் வருவார்கள் என்று எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் ரஷ்யத் தலைவர் தீவிரமாக இல்லை என்பதைக் காட்டுகிறது என்று ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

அதேநேரத்தில், பேச்சுவார்த்தைகளைச் சுற்றி "ஒரு

## அணுசக்தித் திட்டம்

### ஈரானுக்கு எச்சரிக்கை விடுத்த ட்ரம்ப்



(டோஹா)

ஈரானின் அணுசக்தித் திட்டத்தைப் பொறுத்தவரை, புத்திசாலித்தனமான தீர்வு வேண்டுமா? அல்லது கொடூரத் தாக்குதல் வேண்டுமா? என்பதை அந்நாடே முடிவு செய்ய வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதாக அமெரிக்கா குற்றம்சாட்டி வருகின்றது. அத்துடன் அணு ஆயுத உற்பத்தியை நிறுத்தவில்லை என்றால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டி இருக்கும் என்றும் தொடர்ந்தும் ஈரானை எச்சரித்து வருகின்றது.

இந்நிலையில் கட்டாரின் தலைநகரான டோஹாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்ட்ரம்ப் மன்னர் (அமிர்) தமீம் பின் ஹமாத் அல் தானியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். அதைத் தொடர்ந்து வணிகத் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போதே ஈரானின் அணுசக்தித் திட்டம் தொடர்பாக ஒப்பந்தம் மேற்கொள்வது அல்லது வான் வழித் தாக்குதலை எதிர்கொள்வது என இரண்டு தீர்வுகள் மட்டுமே அந்நாட்டுக்கு உள்ளன எனவும் பிரச்சினையை மிருகத்தனமான முறையில் அல்லாமல், புத்திசாலித்தனமான முறையில் தீர்க்கவே தாம் விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

## புர்ஜ் கலிபாவில்

### ஒளிர்ந்த அமெரிக்கக் கொடி

(டுபாய்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் டுபாய் வந்ததை முன்னிட்டு, புர்ஜ் கலிபா கட்டடத்தில் லேசர் ஒளியால் அமெரிக்கக் கொடி ஒளிபரப்பானது.

சுற்றுலாவாசிகளின் சொர்க்கம் என அழைக்கப்படும் டுபாய் நாட்டில் உலகின் மிக உயரமான புர்ஜ் கலிபா கட்டடம் அமைந்துள்ளது.

சுமார் 124 மாடிகளைக் கொண்ட புர்ஜ் கலிபா கட்டடத்தில் நட்சத்திர ஹோட்டல்கள், அலுவலகங்கள், கடைகள், வர்த்தக நிறுவனங்கள், குடியிருப்புகள் மற்றும் நீச்சல் குளங்கள் என அனைத்து அம்சங்களும் இடம்பெற்றுள்ளன. இது 2,717 அடி (828 மீற்றர்) உயரம் கொண்டது. முழுவதும் கறுப்பு நிறச் சலவைக்கற்கள், எவர் சில்வர் மற்றும் கண்ணாடிகளால் இந்தக் கட்டடம் வடிவமைக்கப்பட்டது.

இந்தக் கட்டடத்தை ஒட்டியுள்ள நீர்நிலையில் லேசர் ஒளிவெள்ளத்தில் இசைக்கேற்ப நடனமாடும் அழகிய நீரூற்றும் அமைக்கப்பட்டுள்ளது.



# திக்க



நாடகத்தை" நடத்த உக்ரைன் முயற்சிப்பதாக ரஷ்யா குற்றம் சாட்டியது.

பேச்சுவார்த்தைக்காக இஸ்தான்புல்லுக்கும் செல்லப்போவதில்லை என்றும், போர் நிறுத்தம் குறித்து விவாதிப்பதே தனது குழுவின் பணி என்றும் ஜெலென்ஸ்கி தெரிவித்தார். (நி-8)

புர்ஜ் கலிபா மற்றும் டுபாயில் உள்ள பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுக்காக உலக நாடுகளில் இருந்து லட்சக்கணக்கான சுற்றுலாவாசிகள் ஆண்டுதோறும் இங்கு வருகின்றனர்.

இதற்கிடையே, டுபாயில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு நடந்து வருகிறது. இந்த மாநாட்டில் பங்கேற்க பல்வேறு வெளிநாட்டுத் தலைவர்கள் அங்கு முகாமிட்டுள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் டுபாய் வந்ததை முன்னிட்டு, புர்ஜ் கலிபா கட்டடத்தில் லேசர் ஒளியால் அமெரிக்கக் கொடி ஒளிபரப்பானது. (நி-8)



# போர் நிறுத்தத்தைத் தொடர இந்தியா - பாகிஸ்தான் இணக்கம்

(டில்லி)

எல்லை தாண்டிய அனைத்து இராணுவ நடவடிக்கைகளுக்குமான இடைநிறுத்தத்தை நீட்டிக்க இந்தியாவும் பாகிஸ்தானும் கூட்டாக ஒப்புக்கொண்டுள்ளன.

தொடர்ச்சியான பதற்றங்களுக்கு மத்தியில், இரு நாடுகளின் இராணுவ நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் ஜெனரல்கள் "நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகளை" தொடர நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகுதியில் முடிவு செய்துள்ளனர்.

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பதிலடியாக, மே 7 ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா ஆப்ரேஷன் சிந்தூர் என்ற நடவடிக்கையைத் தொடங்கியது.

எல்லைக்கு அருகிலுள்ள இராணுவ தளங்கள் மீது பாகிஸ்தான் ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியதை அடுத்து, ஒரு நாள் கழித்து இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றங்கள் அதிகரித்தன, அந்தத் தாக்குதலை இந்தியா முறியடித்தது.

மூன்று நாட்கள் கடுமையான இராணுவ தாக்குதல்களுக்கு பின்னர், மே 10 அன்று பாகிஸ்தான் இராணுவ நடவடிக்கைகளை ஜெனரல்கள் தனது இந்தியப் பிரதிநிதியை அழைத்து எல்லை தாண்டிய அனைத்து வகையான துப்பாக்கிச் சூடுகளையும் நிறுத்துமாறு கேட்டுக்கொண்டதை அடுத்து, இரு நாடுகளும் இரு தரப்பிலிருந்தும் துப்பாக்கிச் சூட்டை நிறுத்த ஒப்புக்கொண்டன.

இருப்பினும், எல்லைக் கிராமங்களில் இருந்து கடுமையான ஷெல் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக தகவல்கள் வெளியான சில மணி நேரங்களுக்குப் பின்னர் பாகிஸ்தான் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறியதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. (நி-8)



# 160 விமானங்களுக்கு ஓடர் கொடுத்த கட்டார்

## இது ஒரு வரலாற்றுச் சாதனை என அறிவித்த ட்ரம்ப்

(கட்டார்)

அமெரிக்காவின் Boeing நிறுவனத்திடம் கட்டார் ஏர்வேஸ் 160 விமானங்களுக்கு ஓடர் கொடுத்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தனது மத்திய கிழக்குப் பயணத்தின் போது, விமான உற்பத்தியில் உலகின் மிகப்பாரிய வர்த்தக ஒப்பந்தமாகக் கருதப்படும் 200 பில்லியன் டொலர் மதிப்புள்ள Boeing ஒப்பந்தத்திற்கு சாட்சியமாக இருந்தார்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், கட்டார் அரசின் கீழ் இயங்கும் கட்டார் ஏர்வேஸ் அமெரிக்க விமான தயாரிப்பு நிறுவனமான Boeing - இனிடமிருந்து 160 புதிய விமானங்களை வாங்க உள்ளது.

"இது 200 பில்லியன் டொலரைத் தாண்டும், ஆனால் 160 விமானங்கள் என்பதே முக்கியம். இது ஒரு சாதனை!" என ட்ரம்ப் தெரிவித்தார்.

இந்த வர்த்தக ஒப்பந்தம், ட்ரம்பின் கட்டார் பயணத்தில் முக்கியத்துவமான நிகழ்வாக அமைந்தது. (நி-8)



# குழந்தைகளிடையே அதிகரித்துள்ள நோய்த் தாக்கங்கள் - சுகாதார அதிகாரிகள்

(கொழும்பு)

**இன்ஃப்ளுவன்ஸா, டெங்கு காய்ச்சல் மற்றும் சிக்குன்குனியா ஆகிய தொற்றுக்கள் குழந்தைகளிடையே தற்போது அதிகரித்து வருவதாகச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.**



குறிப்பாக இந்தப் பண்டிகைக் காலத்தில் குழந்தைகள் அதிகமாக வெளியிடங்களுக்கு அழைத்து செல்லப்பட்டமை இதற்கு காரணமாக இருக்கலாம் என கூறப்படுகிறது.

இந்த வைரஸ் நோய்களில் குறிப்பாக இன்ஃப்ளுவன்ஸாவின் அதிகரிப்பு காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமீபத்திய மழைப்பொழிவு மற்றும் நுளம்புகளின் அதிகரிப்பு காரணமாக பல தொற்று நோய்கள் அதிகரித்துள்ளதாகவும் கூடுதலாக வயிற்றுப்போக்கு நோய்களின் அதிகரிப்பும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1996-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
8இல் செவ்
கி.பா-34
உயரம்: 5'
தகைமை/தொழில்: HNDA,Accountant
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15470

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா-32 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில் -O/L, Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15471

பிறப்பு: 1993-இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
2இல் சூரிசெவ்
கி.பா-40 1/4
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc,Demo
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15472

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்: பூசம்
12இல் செவ்
கி.பா- 28 1/2
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: BSc, Team Lead (Canada)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15473

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி.பா- 14 1/2
7இல் செவ்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: MBBS,Doctor
எதிர்பார்ப்பு: பட்டதாரி,Doctor
தொ.இ: B/15474

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1995-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
உயரம்: 150cm
தகைமை/தொழில்:A/L
விவாகரத்தானவர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு, விவாகரத்தானவர்
தொ.இ: G/14117

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா-61
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Banking Diploma BBM (Following)
எதிர்பார்ப்பு: அரச/தனியார் வேலை, விவாகரத்தானவர்
தொ.இ: G/14026

பிறப்பு: 1995-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா- 28 3/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: College, Bsc(final year), Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், வெளிநாடு
தொ.இ: G/13990

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்: அனுசம்
3இல் சூரிசெவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14037

பிறப்பு: 1988-இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா-48
உயரம்: 5
தகைமை/தொழில்: BA,MA,M.Phil
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/14042

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 375



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# ஆளும் தகுதி

ஒரு சீன தேசத்து அரசர் இருந்தார். அவருக்கு வயதாகிவிட்டது. அவருக்கு அடுத்தபடியாக அவருடைய மகனை பட்டத்துக்கு வர வேண்டும். ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு நல்ல தலைவனுக்கு இருக்கவேண்டிய பண்புகள் எல்லாம் தன்னுடைய மகனுக்கு இருக்க வேண்டும் என்று விரும்பினார் அந்த அரசர். அதனாலே அந்த இளவரசனை பக்கத்திலே இருந்த ஒரு குருவிடம் அனுப்பினார்.

இளவரசன் அவரிடம் போய் சேர்ந்தான். அந்தக் குரு என்ன செய்தார். தெரியுமா? இவனைப் பார்த்து சொன்னார்: "இதோ பார் நீ இப்போதே பக்கத்திலே இருக்கும் காட்டுக்குப்போ! நடு காட்டுக்குப் போய் ஒரு இடத்திலே உட்கார்ந்து கொள். அங்கே என்னென்ன சத்தமெல்லாம் உன் காதிலே விழுகிறது என்று கவனித்துக்கேள்.

உன் காதிலே விழுந்த ஓசைகள் என்னென்ன என்பதை என்னிடம் வந்து சொல்அதுதான் உனக்கு வேலை" அப்படி என்று சொல்லி அனுப்பினார். இளவரசன் காட்டுக்குப்போனான். குரு சொன்னபடியே ஒரு இடத்திலே உட்கார்ந்து கவனித்துக் கேட்டான். அதன் பின் குருவிடம் திரும்பி வந்தான்.

"என்னென்ன சத்தமெல்லாம் கேட்டாய்?" என்று கேட்டார் குரு! "குருவே காட்டுலே நான் பறவைகள் சத்தமெல்லாம் கேட்டேன். மிருகங்களின் ஓசையையும் கேட்டேன். இதைத்தவிர இடி - மின்னல் - மழை இவற்றின் சத்தத்தையும் கேட்டேன்" அப்படி என்றான். குரு யோசித்தார். "நீ இன்னும் சரியாக கேட்கவில்லை அதனாலே மறுபடியும் காட்டுக்குப்போ கொஞ்ச நாள் தங்கியிருந்து கேட்டுவிட்டுவா" என்றார். இளவரசனுக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் குருவின் கட்டளையாயிற்றே !மறுக்க முடியுமா? உடனே அவன் மறுபடியும் காட்டுக்குப் போனான். ஒரு இடத்திலே உட்கார்ந்திருந்தான். கொஞ்சம் உன்னிப்பாக கவனித்துக் கேட்டான். சில நாள் கழித்து குருவிடம் திரும்பி வந்தான்.

"குருவே! இந்தத் தடவை சில துல்லியமான சத்தங்களையும் கேட்டேன். தேனீ பறக்கின்ற சத்தம், நீரோடையின் மெல்லிய ஓசை இதெல்லாம் கேட்டேன்" என்றான்.

குரு சிரித்தார்- "நீ மறுபடியும் காட்டுக்குப்போ இன்னும் சில நாள் அங்கே இரு. முழுமையாகவும் கவனமாகவும் கேட்டுக்கொண்டுவா" அப்படி என்று சொல்லி அனுப்பி வைத்துவிட்டார்.

இளவரசனுக்குக் குழப்பம் அதிகமாகியது. ஒன்றும் புரியவில்லை மறுபடியும் காட்டுக்குப் போனான். மௌனமாக ஒரு இடத்திலே உட்கார்ந்துவிட்டான். அப்படியே தியானத்திலே ஆழ்ந்துவிட்டான். அப்படியே சில நாளிலே, அவனுக்கு இதுவரை கேட்காத ஓசைகள் எல்லாம் கேட்க ஆரம்பித்தது. இதைத்தான் நான் கேட்க வேண்டும் என்று என்னுடைய குரு எதிர்பார்த்திருக்கிறார் என்று புரிந்துகொண்டான். உடனே குருவிடம் ஓடினான்.

"குருவே! இந்தத் தடவை, காதுகளுக்குக் கேட்க முடியாத சில ஓசைகளைக் கூட என்னால் உணர முடிந்தது. பூக்கள் மலருகின்ற ஓசை, சூரியனால் பூமி சூடாகும்போது எழுகின்ற ஓசை, காலை பனித்துளியை புற்கள் குடிக்கின்ற ஓசை இதையெல்லாம் என்னாலே நன்றாக கேட்க முடிந்தது" என்றான்.

குருவுக்கு இப்போது தான் திருப்தி ஏற்பட்டது. இளவரசனைப் பார்த்துச்சொன்னார். "இதோ பாருப்பா. இப்பத்தான் நாட்டை ஆளுகின்ற தகுதி உனக்கு வந்திருக்கிறது!" என்று சொல்லி அதுக்கு விளக்கமும் கொடுத்தார். "எந்த அரசன் தன்னுடைய மக்களின் இதயம் பேசுகின்ற மௌன மொழியை மௌன வார்த்தைகளைக் கேட்கிறானோ! அவன் தான் ஆளத்தகுதி உள்ளவன். எந்த அரசன் தன்னுடைய மக்களின் உணர்ச்சிகளை உண்மையாக உணர்கிறானோ அவன்தான் முதன்மையான அரசன்! போலி வார்த்தைகளை மட்டும் கேட்டு, பல மௌனராகங்களை காதிலே வாங்கிக்கொள்ளாதவன் அரசனே இல்லை. எந்த நாட்டில் எப்போது ஒரு அரசன் தன்னுடைய மக்களின் உணர்ச்சிகளைக் கேட்க மறுக்கிறானோ அன்றிலிருந்தே அந்த நாடு அழியத் தொடங்குகிறது என்று அர்த்தம்."

இதுதான் அந்தக் குரு இளவரசனுக்குப் போதித்தது. வாயால் பேசுவதை மட்டும் கேட்டு ஏமாறக்கூடாது. உணர்ச்சிகளையும் கேட்பதாலேதான் மனப்பக்குவம் உண்டாகும்! மக்கள் உணர்ச்சிகளை புரிந்து கொள்ளாத அரசர்கள் நீடித்து இருக்க முடியாது. அது போல நாடுகளிலே அடிக்கடி குழப்பம்தான் உண்டாகும். அடிக்கடி ஆட்சி மாறிக்கொண்டிருக்கும். அப்படிப்பட்ட ஒரு தேசம் அங்கே ஒரு சிறைச்சாலையிலே மூன்று கைதிகள் பேசிக்கிட்டிருந்தார்கள்.

"நான் இந்த நாட்டு ராஜாவை எதிர்த்துப் பேசிக்கொண்டிருந்தேன். அதனாலே என்னை கொண்டு வந்து இங்கே போட்டு விட்டார்கள்!" என்றான் ஒருத்தன். "நான் இந்த நாட்டு ராஜாவை ஆதரித்துப் பேசிக்கொண்டிருந்தேன். அதனாலே என்னை கொண்டு வந்து இங்கே தள்ளி விட்டார்கள்!" என்றான் இன்னொருத்தன். "அதுசரி நீ என்ன தவறு செய்தாய்?" என்று மூன்றாவது ஆளைப் பார்த்து இவர்கள் கேட்டார்கள். அதற்கு அந்த ஆள் மெதுவாக சொன்னார்.

"நான்தான் இந்த நாட்டு முன்னாள் ராஜா!" என்றார்.

# மக்களின் காணிகள் அபகரிக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது!

## ரவிகரன் எம்.பி எச்சரிக்கை

(வவுனியா)

**மக்களுடைய காணிகள் மக்களிடமே சேரவேண்டும். இவ்வாறு வனவளத் திணைக்களமோ அல்லது ஏனைய அரச திணைக்களங்களோ மக்களின் காணிகளை அபகரிக்கும் சட்டமீறல் செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது என வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட ஏ.சி.பாம் கிராம மக்களை உடனடியாக மீள்குடியமர்த்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அவ்வாறு அவர்களைக் குடியேற்றத் தவறினால் குறித்த பகுதியில் மக்களோடு இறங்கி துப்பரவுசெய்து ஏ.சி.பாம் கிராம மக்களை குடியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப்படாத பூர்வீகத் தமிழ் கிராமங்களான ஏ.சி. பாம், தண்ணிமுறிப்பு ஆகிய பகுதிகளுக்கு களவிஜயம் மேற்கொண்டிருந்த நிலையில் அவர் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தண்டுவான் கிராமத்திற்கு அண்மையிலுள்ள ஏ.சிபாம் என்னும் பூர்வீகத் தமிழ்க் கிராமம் இதுவரையில் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை.

இந்நிலையில் அப்பகுதி மக்களின் அழைப்பையேற்று குறித்த பகுதிக்கு களவிஜயமொன்றினை மேற்கொண்டு குறித்த ஏ.சி.பாம் கிராம மக்களின் நிலைமைகள் குறித்து ஆராய்ந்துள்ளேன்.

அந்தவகையில் அசாதாரண நிலைமை காரணமாக கடந்த 1997 ஆம் ஆண்டு அப்பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்த சுமார் 46 குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் தமது வாழ்விடங்களிலிருந்து இடம்பெயர்ந்தனர். இந்நிலையில் தற்போதுவரையில் குறித்த ஏ.சிபாம் கிராமத்தைச்சேர்ந்த தமிழ்மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை.

இருப்பினும் குறித்த கிராமத்தில் மக்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. சிதைவடைந்த நிலையில் மக்கள் வாழ்ந்த வீடுகள் காணப்படுவதுடன், வேலிகளுக்காக நடப்பட்ட சீமைக்கிழுவை மரங்களும், மாமரம், தோடை உள்ளிட்ட பலன்தரும் மரங்கள் பலவும் காணப்படுகின்றன.

இத்தகைய சூழலில் கடந்த 2012ஆம் ஆண்டு குறித்த ஏ.சி பாம் கிராமம் தண்டுவான் ஒதுக்கக்காட்டுப்பகுதியாக வர்த்தமானிமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், வனவளத் திணைக்களம் குறித்த பகுதியை ஆக்கிரமித்துள்ளது.

தமிழ்மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடங்கள் இவ்வாறுதான் அபகரிப்புச் செய்யப்படுகின்றன. இந்நிலையில் தங்களுடைய பூர்வீக வாழிடத்தில் மீள்குடியேற்றுமாறு இக் கிராம மக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர்.

இதேபோல் தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்படாமல் காணப்படுகின்றது. அப்பகுதி மக்களும் தமது பகுதிகளையும் மீள்குடியேற்றுமாறு தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுக்கின்றனர்.

இவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்படாமலுள்ள தமிழ் மக்களின் பூர்வீக இடங்களை இந்த அரசாங்கம் மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதுதொடர்பிலே பாராளுமன்றிலும் பேசுவதுடன், ஜனாதிபதி, பிரதமர், உரிய அமைச்சுக்களின் கவனத்திற்கும் கொண்டுவந்து இவ்வாறு மீள்குடியேற்றப்படாமலுள்ள பகுதிகளை மீள்குடியேற்றுவது தொடர்பிலும் வீமன்காமம் பகுதியில் வனவளத்திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள 10 பேருக்குரிய, 20 ஏக்கர் விவசாயக்காணிகளையும் விடுவிப்பது தொடர் பிலும் கவனம் செலுத்தப்படும் என அவர் தெரிவித்தார். (நி-8-299)

# தமிழினப் படுகொலை; நினைவு ஊர்தி வவுனியாவில்



(வவுனியா)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் தமிழினப் படுகொலையில் உயிர் நீத்தவர்களை நினைவு கூரும் ஊர்திப் பவனி நேற்றுக் காலை வவுனியாவை வந்தடைந் தது.

யாழ்ப்பாணம் நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்கு முன்பாக கடந்த புதன் கிழமை ஆரம்பமான ஊர்திப் பவனி ஓமந்தை ஊடாக நேற்று வவுனியா நகரை வந்தடைந்தது.

இதன்போது, வவுனியாவில் நகரசபை வாயிலில் அமைந்துள்ள பொங்குதமிழ் தூபியில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து நகர வீதியூடாக தினச்சந்தையை அடைந்தது.

குறித்த ஊர்திப் பவனியை உணர்வெழுச்சியுடன் வரவேற்ற வவுனியா மக்கள் தமது அஞ்சலிகளை செலுத்தினர். (நி-8)

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

# கிளிநொச்சி வர்த்தக சந்தை பூட்டு

## வர்த்தக சங்கத் தலைவர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி தமிழினம் எதிர்கொண்ட பேரழிவுகளின் நினைவு நாளை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி வர்த்தக சந்தையின் வர்த்தக செயற்பாடுகள் யாவும் நிறுத்தி முள்ளிவாய்க்கால் நினைவு நாள் நிகழ்வு உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படும் என கிளிநொச்சி வர்த்தக சங்கத் தலைவர் இ.கிருஷ்ணராஜாவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8-350)

# முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வுகள்



புதுக்குடியிருப்பு



கிளிநொச்சி



வவுனியா



விசுவமடு

(8-316-299-350)

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 774





உன்னைப் பார்த்து அது தன் சந்தோஷத்தைத் தெரியப் படுத்தியதாக்கும்?" "என்ன அம்மா, என்னைக் கேலி செய்கிறீர்களே?" நான் பிரமை பிடித்து அலைகிறேன் என்று நீ மட்டும் என்னைப் பரிகாசம் செய்யவில்லையா?"

"ஒருவேளை உங்கள் கண்ணாடியில் தெரிந்த முகம் அந்தக் குரங்கின் முகம் தானோ என்னமோ! நாம் வந்த வாசலுக்கு நேரே இருக்கிறது, பாருங்கள்! குரங்கு மறுபடியும் அசைகிறது!"

சீச்சீ! உன் விளக்கின் நிழலடி! விளக்கின் நிழல் அசையும் போது அப்படிக் குரங்கு அசைவது போலத் தெரிகிறது வா போகலாம்! இங்கே ஒருவரையும் காணோம்!"

"அப்படியானால் அந்தக் குரங்கு முகம்தான் கண்ணாடியில் தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிடில் அதோ மேலே உட்கார்ந்திருக்கிறதே, அந்த ஆந்தையின் முகமாக இருக்கலாம். அது நம்மைப் பார்த்து எப்படி விழிக்கிறது பாருங்கள்!"

"என்னை ஏன் சேர்த்துக் கொள்கிறாய்? உன் அழகைப் பார்த்துச் சொக்கிப் போய்த் தான் அந்த ஆந்தை அப்படிக் கண்கொட்டாமல் பார்க்கிறது!" "பின்னே, தங்களைக் கண்ணாடியில் எட்டிப் பார்த்த முகம் யாருடைய முகமாயிருக்கும்?"

"அடியே! எனக்குத் தான் சித்தப்பிரமை என்று நீ முடிவு கட்டி விட்டாயே? என் கனவில் அடிக்கடி தோன்றும் முகம் கண்ணாடியிலும் தோன்றியிருக்கலாம். அந்தச் சுந்தர முகத்தைப் பார்த்த கண்ணால் இந்தக் குரங்கையும் ஆந்தையையும் பார்க்க வேண்டி வந்ததே என்று எனக்குக் கஷ்டமாயிருக்கிறது. வாடி, போகலாம்! கண்ணாடியில் இன்னொரு தடவை அந்த முகம் தெரியுமா என்று பார்க்கிறேன்!" இரண்டு பெண்களும் மறுபடியும் வந்த வழியே புகுந்து அந்தப் புற அறைக்குள்ளே போனார்கள்.

வாலில்லாக் குரங்குக்குப் பின்னாலிருந்து வந்தியத்தேவன் வெளியில் வந்தான். இரண்டு மூன்று தடவை தும்மி மூக்கில் புகுந்திருந்த தூசி குப்பைகளைப் போக்கிக் கொண்டான். தன்னை அவ்வளவு நன்றாக மறைத்திருந்த வாலில்லாக் குரங்குக்குத் தனது நன்றியைச் செலுத்தினான்.

"ஏ குரங்கே! நீ வாழ்க! அந்தப் பணிப்பெண் என் முகத்தை உன் முகத்தோடு ஒப்பிட்டாள். அப்போது எனக்குக் கோபமாய்த்தான் இருந்தது. வெளியில் வந்து விடலாமா என்று கூட எண்ணினேன் நல்ல வேளையாய்ப் போயிற்று மனத்தை அடக்கிக் கொண்டேன். நீ மட்டும் இங்கே ஆள் உயரத்துக்கு நின்றிராவிட்டால்' என் கதி என்ன ஆயிருக்கும்? அந்தப் பெண்களிடம் அகப்பட்டுக் கொண்டிருப்பேன்! குரங்கே! நீ நன்றாயிருக்க வேணும்!"

இப்படிச் சொல்லி முடிக்கும்போதே, அந்தப் பெண்களிடம் அகப்பட்டுக் கொண்டிருந்தாலும் அப்படி ஒன்றும் விபரீதமாகப் போயிராது என்ற எண்ணம் அவன் மனத்தில் தோன்றியது. அவர்கள் யார் என்பதை முன்னமே ஊகித்துக் கொண்டிருந்தான். அவர்கள் பேசிய வார்த்தைகள் யாவும் அவன் காதில் நன்றாய் விழுந்தன. அதிலும் மணிமேகலை உரத்தக் குரலில் கணீர் என்று பேசினாள். கனவில் கண்ட முகத்தைப் பற்றியும் கண்ணாடியில் பார்த்த முகத்தைப் பற்றியும் அவள் ஏதோ பேசினாளே, அது என்ன? பழைய சம்பவங்கள் அவனுக்கு நினைவு வந்தன.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஒரு நீண்ட பயணம்



(நேற்றைய தொடர்ச்சி)

அதற்கு பச்சைக் கிளி நாங்கள் பல நூற்றாண்டுகளா இங்கு தான் இருக்குறோம் என்று எமது பாட்டி எனக்கு சொல்லியிருக்கிறார். அந்த அளவுக்கு இந்தக் காடு எல்லோருக்கும் வேண்டியதை அள்ளிக் கொடுக்கும். இந்த இடத்தில காய், கனி, விதை என எதற்கும் எங்களுக்கு பிரச்சினை இல்லை. ரொம்ப சந்தோஷமாக நாம் இங்கு இருக்கிறோம் என்று கூறியது. உடனே மரத்தின் ஆங்காங்கே இருந்த பொந்திலிருந்து ஒரு 50 பச்சைக் கிளிகள் எட்டி பார்த்து ஆமாம்... ஆமாம்... நாங்கள் ரொம்ப சந்தோஷமா இருக்கிறோம் என்று கூச்சலிட்டு பறந்தன. இதைப் பார்த்து குதிரையும் ஒட்டகச்சிவிங்கியும் மெய் சிலிர்த்து போயின..

அந்த நேரத்தில் மழையும் ஓய்ந்து சிறு சிறு மழைத் தூரல்களாக போட்டுக் கொண்டிருந்தது. அங்கிருந்து விடைபெற்று இரண்டும் நடக்கத் தொடங்கின. நண்பா! நண்பா! சீக்கிரம் வா அவர்கள் வந்து விட்டார்கள் என்று பின்னாலிருந்து குரல் கேட்டது. குதிரை சுதாகரித்துக் கொண்டு கண் விழித்துப் பார்த்தது. அப்போது ஒரு பெரிய ஜேசிபி மற்றும் மரம் அறுக்கும் இயந்திரம் ஒன்றையும்' எடுத்துக் கொண்டு ஒரு கூட்டம் வந்து கொண்டிருந்தது.

அப்போது தான் குதிரைக்குப் புரிந்தது பாதிக் காட்டை அழித்து மனை ஆக்கிவிட்டனர் இந்த மனித கயவர்கள். அதன் பின் மீதிக் காட்டை அழிக்க அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். குதிரை நாம் வந்தபோது இந்தக் காடு எப்படி இருந்தது என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டிருந்தது அதை நினைத்து முடிப்பதற்குள் இந்த மனிதப் பிறவிகள் மீதி இருக்கும் மரங்களையும் அங்கு இருக்கும் உயிர்களையும் அழிக்க வந்து விட்டனர். குதிரையும் ஒட்டகச்சிவிங்கியும் கண்ணீருடன் நாம் மலை மேலே ஏறி அங்கே வாழ்ந்து கொள்ளலாம் அங்கேயும் இவர்கள் வந்தார்கள் என்றால் நாமெல்லாம் எதிர்த்து நம் இடத்திற்காகப் போராடத் தான் வேண்டும் என்றது.

நீதி: பறவைகளும் விலங்குகளும் மனிதர்களுக்கு எந்தத் தொந்தரவும் செய்வதில்லை. நாம் அவற்றின் இடத்தை கைப் பற்றாமல் இருக்கும் வரையில்.

இந்தப் பூமி நமக்கு மட்டும் சொந்தமில்லை அனைத்து ஜீவ ராசிகளுக்கும் தான் சொந்தம்.

(முற்றும்)

முதலில் தன்னை மாற்றிக்கொள்ளத் தயாராக இருப்பவன் மட்டுமே, உலகை மாற்றத் தகுதியுடையவன்.
~சுபாஸ் சந்திரபோஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சந்ததி சந்ததியாக உங்களை அழித்தே ஆகும்

அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றோ செல்வத்தைத் தேய்க்கும் படை என்கிறார் வள்ளுவர்.

எவ்வளவுதான் சக்திமிக்க படைக்கலங்கள் இருந்தாலும் ஆற்றாது அழுத கண்ணீரை வெல்ல வல்ல படைக்கலம் எதுவுமில்லை.

இந்த உண்மையையே வள்ளுவப் பெருமான் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஆம், வன்னிப் பெருநிலப்பரப்பிலும் அதற்கு முன்பும் தமிழ் மக்கள் மீது சிங்களப் பேரினவாதிகள் நடத்திய தாக்குதல்கள் இந்த நாட்டில் இருந்து தமிழ் இனத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கை என்பது பட்டவர்த்தனமான உண்மை.

எனினும் இந்த உண்மையை மறைக்க சிங்களப் பேரினவாதிகள் கடும் பிரயத்தனம் செய்கின்றனர்.

இங்குதான் ஓர் உண்மையை நாம் கூறியாக வேண்டும்.

அதாவது, 1983 ஜூலைக் கலவரத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். அவர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

இக்கொடும் செயல் நடந்த 83 ஜூலைக் கலவரத்துக்காக தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்கிறோம் என விஜயதாஸ ராஜபக்ஷ கடந்த வருடம் பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.

இதேபோல் 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க; தமிழ் மக்களின் பெருஞ் சொத்தாகிய யாழ்ப்பாணப் பொது நூலகத்தை எரியூட்டியமை மிக மோசமான செயல்.

அந்தச் சம்பவத்தைச் செய்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படும் எனக் கூறியிருந்தார்.

இங்குதான் ஓர் உண்மையை நாம் உணர்ந்தாக வேண்டும். அதாவது அநியாயங்கள், அட்டூழியங்கள், இன அழிப்பு நடவடிக்கைகளைச் செய்துவிட்டு தப்பித்து விடலாம் என்று யார் நினைத்தாலும் அது ஒருபோதும் சாத்தியமாகாது. அத்தகைய நினைப்புகளுக்கு இயற்கை இடம்கொடுப்பதுமில்லை.

இதற்குப் பல உதாரணங்களை முன் வைக்க முடியும். வன்னிப் பெருநிலப்பரப்பில் மிக மோசமான போரை நடத்தி அப்பாவித் தமிழ் மக்களைக் குண்டு போட்டுக் கொன்றும் சரணடைந்தவர்களைக் காணாமல் ஆக்கியும் தமிழ் மக்களுக்குப் பேரவலத்தை விளைவித்த மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தை தென்பகுதி மக்கள் அரகலப் போராட்டத்தின் மூலம் ஓட ஓடத் துரத்தினர்.

இதற்கும் மேலாக, மகிந்தவின் தந்தையார் ராஜபக்ஷவின் சிலையை அடித்து உடைத்து கீழே விழுத்தியதையும் மகிந்தவின் வீட்டை எரியூட்டியதையும் ஒரு கணம் நினைத்தால், வள்ளுவன் கூறிய ஆற்றாது அழுத கண்ணீரின் படைபலம் எத்தகையது என்பது தெரியவரும்.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழின அழிப்பில் உயிரிழந்த தமிழ் மக்களின் நினைவாக; கனடா நாட்டில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபிக்கு மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ கண்டனம் தெரிவிக்கிறார் எனும்போது, இவர்களின் சந்ததி தம் அழிவுக்கான ஈனத்தைத் தேடிவிட்டதென்பது உறுதி செய்யப்படுகிறது.

## புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கான பரிந்துரைகளை முன்வைக்க மக்களுக்கு நீதி அமைச்சு அழைப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைமுறையில் உள்ள 1979 ஆம் ஆண்டு 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடை (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை இரத்துச் செய்து புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான அமைச்சரவை அனுமதிக்கமைய நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவால் தற்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

புதிய மசோதாவை அறிமுகப்படுத்துவதானது, நவீன உலகளாவிய பயங்கரவாத சவால்களை எதிர்கொள்வது, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனிநபர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் சர்வதேசளவில் அங்கீகரிக்கப்பட்ட தரநிலைகளைக் கடைப்பிடிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அதற்கமைய பொது மக்களின் கருத்துகள் மற்றும் பரிந்துரைகள் ஏதேனும் இருந்தால், அவற்றை 14 நாட்களுக்குள் செயலாளர், நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சகம், எண். 1க்கு அனுப்பி வைக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடித உறையின் இடது மூலையில் "பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கான பரிந்துரைகள்" எனக் குறிப்பிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பரிந்துரைகள் அடங்கிய கடிதங்களை நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு, இலக்கம் 19, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு அல்லது legal@moj.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ம-4,7)

## தேர்தல் விதி மீறிய பிரதமரை எம்மால் விசாரிக்க முடியாது

### கைவிரித்தது தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் காலகட்டத்தில் பிரதமர் தேர்தல் விதிமுறைகளை மீறிச் செயற்பட்டார் என அளிக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு தம்மால் நேரடியாக எதுவித மான நடவடிக்கைகளையும் எடுக்க முடியாது என சுயாதீன ஆணைக்குழுவான தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி தேர்தல் அமைதிக் காலத்தில் தேர்தல் விதிகளை மீறி லாவகமாகப் பிரசாரத்தில் ஈடுபடுமாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தமை பாரிய சர்ச்சைகளைத் தோற்றுவித்ததுடன் இது குறித்து முறைப்பாடுகளும் அளிக்கப்பட்டன.

இந்நிலையில், தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க இது தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில்,

இந்த விடயத்தில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு பொலிஸ் திணைக்களத்துக்கும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்குமே இருக்கின்றது எனச் சுட்டிக்காட்டினார்.

மேலும் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அச்சுதன் தேர்தல்களில் இடம்பெறும் விதிமீறல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பொலிஸாரிடமே காணப்படுகின்றது.

சட்டமா அதிபரின் அலோசனையைப் பெற்று பொலிஸார் அது சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்வர் எனத் தெரிவித்தார். (ம-4,7)

### முன்னாள் விவசாய அமைச்சர்

## மகிந்தானந்தவுக்கு பகிரங்கப் பிடியாணை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவை கைது செய்வதற்காக நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தால் நேற்று இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவின் ஆட்சிக் காலத்தில் கடந்த 2021 ஆம் ஆண்டு தரமற்ற உரம் இறக்குமதி செய்யப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பிலேயே அவரைக் கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-4,7)

### ஆனியில் ஆரம்பமாகும்

## கதிர்காமக் கந்தனின் ஆடிவேல் உற்சவம்

(கதிர்காமம்)

கதிர்காமம் கந்தப் பெருமானின் ஆடிவேல் திருவிழாவானது இம்முறை திகதிகள் மாற்றப்பட்டு ஆனியில் ஆரம்பிக்கின்றமை சைவர்களிடை குழப்பமான ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது.

கதிர்காமக் கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் திருவிழா திகதி உத்தியோக பூர்வமாக கதிர்காமம் ருகுணு மகா தேவாலய நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் 2025 ஆம் ஆண்டுக்கான கதிர்காமத்தின் வருடாந்த அசல பெரஹெரா எனப்படும் ஆடிவேல் திருவிழா ஜூன் 26 ஆம் திகதி ஆரம்பமாகி, ஜூலை 07 ஆம் திகதி தீ மிதிப்பு வைபவம் இடம்பெற்று ஜூலை 10 ஆம் திகதி மஹா பெரஹெரா இடம்பெற்று மறுநாள் 11 ஆம் திகதி காலை மாணிக்க கங்கையில் நீர் வெட்டும் சடங்குடன் அதாவது தீர்த்தத்துடன் நிறைவடையவுள்ளது.

இதேவேளை இலங்கையின் பழமைவாய்ந்ததும் மிக நீண்டதுமான செல்வச்சந்நிதி முதல் கதிர்காமம் வரையான பாதயாத்திரையானது கதிர்காம ஆடிவேல் உற்சவத்தின் ஆரம்ப நாளான ஜீன் 26ம் திகதி கதிர்காமத்தைச் சென்றடையும் வண்ணம் கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

## நுரையீரலில் கிருமித்தொற்று இரண்டு மாதக் குழந்தை பலி

நுரையீரலில் கிருமித் தொற்று ஏற்பட்டு அக் கிருமித் தொற்றால் இரண்டு மாத ஆண் குழந்தை ஒன்று மரணம் அடைந்த சம்பவம் நீர்வேலி தெற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வருண் பிரதீப் என்ற இரண்டு மாத ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடந்த 14ஆம் திகதி சளி ஏற்பட்டதால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். பின்னர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (15) யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போதும் பிற்பகல் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையில் நுரையீரலில் கிருமித் தொற்று ஏற்பட்டு அக்கிருமித் தொற்றால் மரணம் ஏற்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-4,7,60)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 11.05.2025 முதல் 26.05.2026 வரை

45/100



**கன்னி இராசி நேயர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 9ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் 11. 5. 2025 அன்று 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கிறார். 10இல் குரு வந்தால் பதவியில் மாற்றம் உண்டு என்பார்கள். எனவே உத்தியோக மாற்றங்கள், தொழில் மாற்றங்கள் வருவதற்கான வாய்ப்பு உண்டு. குரு கவசம் பாடிக் குருவை முறையாக வழிபடுவதன் மூலம் வரும் புனிதமடைகின்றன. குடும்ப ஸ்தானத்தை குரு பார்ப்பதால் குடும்ப முன்னேற்றம் திருப்திகரமாக இருக்கும். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பர். வருமானம் அதிகரிக்கும். இந்த நேரத்தில் புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

குருவின் பார்வை 4ஆம் இடத்தில் பதிவதால் அசையாச் சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள்.

கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். புதிய வாகனங்கள் வாங்கி மகிழ்வீர்கள்.

திருவாதிரை நட்சத்திரக் காலில் ராகு சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது 10.6.2025 முதல் 7.8.2025 வரை நீங்கள் எதிர்பார்த்த காரியங்கள் சிறப்பாக நடைபெறும். அஷ்டலட்சுமி

**கன்னி**

உத்திரம் 2,3,4-ம் பாதம், அஸ்தம், சித்திரை 1,2-ம் பாதம்



யோகம் செயற்படும். இந்த நேரத்தில் பணப்புழக்கம் நன்றாக இருக்கும்.

தொழில் வெற்றி நடைபோடும். எதிரிகளின் பலம் குறையும். உத்தியோகத்தில் உயர்பதவியுடன் கூடிய இட மாற்றம் வரலாம். நல்ல காரியங்கள் பலவும் பர்.

முக்கிய புள்ளிகளின் ஆதரவு கிடைக்கும். அதன் மூல மாக முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொள்வீர்கள். இல்லத்தில் எப்பொழுது மங்கல ஓசை கேட்கும் என்று கவலைப்பட்டவர்களுக்கு இப் பொழுது மகிழ்ச்சி தரும் விதத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். பிறருக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்துசேரும்.

இரவு பகலாக பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும் நேரமிது. பங்குச் சந்தையில் இலாபம் உண்டு. பணிபுரியும் இடத்தில் நீங்கள் எதிர்பார்த்த மாற்றம் வரலாம். உழைப்புக் கேற்ற ஊதியம் கிடைக்கும்.

**சனிப்பெயர்ச்சி**

6.3.2026 அன்று சனி பக

# பத்தில் வந்தது குரு! பதவியில் மாற்றம் உண்டு!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

மாற்றம் நல்ல மாற்றமாக அமையும்.

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதி யானவர் குரு. சுக ஸ்தானம் மற்றும் களத்திர ஸ்தானத்திற்கு அதிபதியாக விளங்குவதால் சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும். ஆனால் பதவி மாற்றம் திடீரென வரலாம்.

எனவே பணிபுரியும் இடத்தில் மிகமிக கவனம் தேவை. ஒருசிலருக்கு மேலதிகாரிகளின் கெடுபிடியால் மாற்றம் வரலாம். களத்திர ஸ்தானாதிபதியா கவும் குரு விளங்குவதால் கல்யாண முயற்சிகள் கைகூடும். வாழ்க்கைத்துணையோடு ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்,

**குருவின் பார்வை பலன்**

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவானு டைய பார்வை உங்கள் இராசிக்கு 2,4,6 ஆகிய இடங் களில் பதிகிறது. எனவே அந்த இடங்கள் எல்லாம் குருவின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால் கடன் சுமை குறைய வழிபிறக்கும். எதிரிகளின் தொல்லை குறையும். நீங்கள் தேர்ந்தெடுத்த களம் எதுவாக இருந்தாலும் அதில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்த பங்குதாரர்கள் விலகுவர். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். நீண்ட நாட்களாக நடைபெற்ற வழக்குகள் இப்பொழுது சாதகமாக முடியும்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

11.5.2025 முதல் 9.6. 2025 வரை மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது மிகமிக கவனத்தோடு செயற்பட வேண்டும். நினைத்தது ஒன்றும் நடந்தது ஒன்றுமாகக்கூட இருக்கலாம். நேசம் மிக்கவர்கள் உங்களை விட்டு விலக நேரிடும். தொழில் வியாபாரத்தில் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது.

நடைபெறும் நேரமிது.

8.8.2025 முதல் 25.5.2026 வரை புனர் பூசம் நட்சத்திரக் காலில் தன் சுய சாரத்தில் குரு பகவான் சஞ் சரிக்கும் பொழுது தாய்வழி ஆதரவு உண்டு. இடம், பூமி சேர்க்கை ஏற்படும். பத்திரப்பதிவில் இருந்த தடை அகலும். அலைச்சலின் காரணமாக ஆரோக்கியத் தொல்லைகளும் வரலாம். உத்தியோகத்தில் வெளிநாட்டு முயற்சி களில் வெற்றி கிடைக்கும். வீடு கட்டிக் குடியேற வேண்டும் அல்லது வீடு வாங்கிக் குடியேற வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறும்.

**குருவின் அதிசாரப் பெயர்ச்சி**

8.10.2025 அன்று குரு பகவான் கடக இராசிக்கு பெயர்ச்சியாகிச் செல்கிறார். அங்கு அவர் உச்சம் பெறுகின்றார். அங்கிருந்து கொண்டு உங் கள் இராசிக்கு 3, 5, 7 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே உடன் பிறப்புகள் உறுதுணையாக இருப் வான் கும்ப இராசியில் இருந்து மீன இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். இப்பொழுது உங்களுக்கு கண்டகச் சனியின் ஆதிக்கம் நடைபெறப் போகின்றது. எனவே எல்லாவற்றிலும் நீங் கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சொல்லை செயலாக்கிக் காட்ட இயலாது. துணிவும், தன்னம்பிக்கையும் குறையும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாகப் புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். புண்ணிய காரியங்களுக்கு கொடுத்து உதவுவீர்கள். ஆதாயம் தரும் தகவல்கள் நிறையக் கிடைக் கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். தாய்வழி ஆதரவு உண்டு. உடன்பிறப்புகள் உதவியாக இருப்பர். வீடு,இடம் வாங்கும் யோகம் உண்டு. குருவின் வக்கிர காலத்தில் கல்யாண முயற்சிகள் கைகூடும்.

(தொடரும்)

## பொய்களால்...

கும்புரபிட்டிய பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் வைத்தே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் பதவி ஏற்பதற்கு முன்னர், தேர்தல் மேடைகளில் மின்சாரக் கட்டணத்தை 32 சதவீதத்தால் குறைப்பதாக உறுதியளித்தது.

ஆனால் இப்போது அதனை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது. இது மக்களை ஏமாற்றும் செயல். அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தும் கைவிடப்பட்டுள்ளன.

எரிபொருளை துறைமுகத்தில் இறக்கும் விலைக்கே வழங்குவதாக அரசாங்கம் தேர்தல் மேடைகளில் கூறியது. ஆனால் இப்போது அரசாங்கம் என்ன செய்கிறது?

வெறும் பொய்களால் அரசாங்கம் 220 இலட்சம் மக்களை ஏமாற்றியுள்ளது என சஜித் குற்றம் சுமத்தினார். (ம-7,4)

## ஆனையிறவு...

நேற்றுக் காலை உப்பளத் தொழிற்சாலைக்கு முன்பாகப் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததுடன் போராட்டத்தில் ஈடுபட்ட சிலருக்கு எதிராக நீதிமன்றத் தடை உத்தரவும் பெறப்பட்டிருந்தது.

குறித்த உப்பளத்தில் கடந்த ஒன்பது வருடங்களுக்கு மேலாக பணியாற்றும் தற்காலிக பருவகால ஊழியர்கள் தங்களுடைய பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் இங்கு உற்பத்தியாகும் உப்பினை ஆனையிறவில் பொதிசெய்து விநியோகிக்குமாறு கோரி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றைக் கடந்த புதன்கிழமை (14.05.2025) ஆனையிறவு உப்பளத்தின் முன்பாக முன்னெடுத்து இருந்தனர்.

அதாவது, கடந்த 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆனையிறவு உப்பு உற்பத்தி மையத்தில் தற்காலிகமாக இணைத்துக் கொள்ளப்பட்ட பருவகால ஊழியர்கள் தங்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படாமல் உரிய காலத்தில் உரிய வேதனம் வழங்கப்படாமல் உள்ளமை என்பவற்றைக் கோரியும் ஆனையிறவில் உற்பத்தி செய்யப்படுகின்ற உப்பினை வெளியிடங்களுக்குக் கொண்டு சென்று பதனிடல் செய்ய வேண்டாம் என பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் காரணமாக கடந்த இரண்டு நாட்களும் இங்கிருந்து வெளியிடங்களுக்கு பார ஊர்திகளில் உப்புக் கொண்டு செல்வது நிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றுக் காலை குறித்த பகுதியில் நூற்றுக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டு இருந்ததுடன் நேற்று முன்தினம் இரவு குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட சிலருக்கு எதிராக நீதிமன்றத் தடை உத்தரவையும் பெற்று நேற்றுக் காலை வழங்கியிருந்தனர்.

குறித்த போராட்டத்திற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் சம்பவ இடத்தில் வந்து மக்களிடம் கலந்துரையாடி தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தினுடைய பொது முகாமையாளர் துவான் மன்சூர் மற்றும் தேசிய உப்பு கூட்டுத்தாபன பிரதிநிதிகளும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடி தீர்வு எட்டப்படாத நிலையில் குறித்த கலந்துரையாடல் நிறைவுபெற்றது.

(ம-7,4,315,316)

## உள்ளூராட்சி...

கிரஸூடனான சந்திப்பும் நல்லூரில் உள்ள சுமந்திரனின் இல்லத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியுடனான சந்திப்பும் நடைபெற்றது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் செல்வராஜா கஜேந்திரனும் நடராஜர் காண்டீபனும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், வேந்தன் ஆகியோர் குறித்த சந்திப்பில் பங்கேற்றனர். (ம-7,4,33)

## நாட்டை...

தொடக்கம் நாட்டை மட்டுமல்ல உலகையே உலுக்குமளவுக்கு போராட்டம் முன்னெடுக்கப்படும். இந்தப் போராட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுடன் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்" என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "வடக்கின் கரையோரப் பிரதேசங்களில் வாழுகின்ற மக்கள் பல தடவைகள் இடம்பெயர்ந்த காரணத்தாலும், சுனாமியால் பாதிக்கப்பட்டும், தமது காணிகளுக்கான ஆவணங்களை இழந்துள்ளனர். பலர் அகதிகளாக இன்றைக்கும் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இந்நிலையில் அவர்களது காணிகளை அரசுடமையாக்கும் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பழைமையான இந்தச் சட்டம் பிரயோகிக்கப்படக்கூடாது. இந்த வர்த்தமானி பிரசுரம் உடனடியாக மீளப் பெறவேண்டும் என்று நாங்கள் கூறி இருக்கின்றோம். அப்படி மே மாதம் 28 ஆம் திகதிக்கிடையில் இது மீளப்பெறாவிட்டால், நாங்கள் பாரியதொரு போராட்டத்தை அரசுக்கு எதிராக நடத்துவோம் என்றார்.

(ம-7,4,33)

## இனப்...

ஈழத்தமிழர்கள் மீது இனப்படுகொலை மேற்கொள்ளப்படவில்லை என்று கூறும் சிங்களப் பேரினவாதிகள், உலகத்தின் கண்களையும் மனச்சாட்சியையும் மறைக்கப் பார்க்கிறார்கள்.

காலங்காலமாக எங்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலையின் கறைபடிந்த வரலாற்றின் நாளான குமுதினிப் படுகொலையின் 40 வது ஆண்டு நினைவேந்தலில், வலிசுமந்த நெடுந்தீவு மண்ணிலிருந்து, கனேடியப் பிரதமருக்கும் பிரம்டன் நகர மேயருக்கும் எனது நன்றிகளைப் பகிரங்கமாகத் தெரிவிக்கிறேன் என பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

குமுதினிப் படகில், குருநகர் கடலில், கொக்கட்டிச்சோலையில், சத்துருக்கொண்டானில், வாகரையில், நவாலியில், நாகர்கோயிலில் தொடங்கி முள்ளிவாய்க்கால் வரை கொத்துக் கொத்தாக எங்களைக் கொன்றொழித்துவிட்டு, ஈழத்தில் இனப்படுகொலை நடைபெறவே இல்லை என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தும், நாமல் ராஜபக்ஷவும், அலி சப்ரியும் தெரிவித்துள்ள கருத்துக்கள் உலகத்தின் மனச்சாட்சியை உலுக்கத்தக்க, சிங்கள வல்லாதிக்க வெளிப்பாட்டுக்குரியவை. அத்தகைய கருத்துக்களை முன்வைத்தோர்க்கு எதிராக நான் எனது வன்மையான கண்டனங்களைப் பதிவுசெய்கிறேன் என்றார். (ம-7,4)


மஹஜன சம்பத
திகதி 2025.05.16 சீட்டிழுப்பு இலக்கம் 5831
W 8 2 4 8 3 7
அத சம்பத W 4 8 3 7 சீட்டிழுப்பு இலக்கம் 406

தன நிதானய
திகதி - 2025.05.16 சீட்டிழுப்பு இலக்கம் - 1861
L 01 21 37 67 L
20892

மெகா பவர்
திகதி 16/05/2025 சீட்டிழுப்பு இலக்கம் 2179
Y 06 10 50 62 68

ஜய ஜய JAYA
திகதி 2025.05.16 சீட்டிழுப்பு இலக்கம் 0099
L 5 8 2 5

கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4073 சீட்டிழுப்பு திகதி 16.05.2025
Z 15 39 40 61
Z

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.16 சீட்டிழுப்பு இலக்கம் 1140
மகரம் 18 20 40 58 மகரம்
74662 08

உத்தியோகபூர்வ முடிவுகள்
16.05.2025 வெற்றி வாரம் 539
T 5 6 1 2 1 6
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ.37,313,970.80
72406

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2805 சீட்டிழுப்பு திகதி 2025.05.16 தினம் வெள்ளிக்கிழமை
20 32 38 61 V
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ. 62,142,703.20

சனிதா
திகதி 16.05.2025 வெற்றி வாரம் 4966
03 19 26 33 G
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ. 63,802,667.20
78311

சசிரி
வெற்றி வாரம் 683 சீட்டிழுப்பு திகதி 16.05.2025 வெள்ளிக்கிழமை
02 16 26
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4517 சீட்டிழுப்பு திகதி 16.05.2025 தினம் வெள்ளிக்கிழமை
13 18 26 50 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ.3,000,000.00
269703

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 03 07 23 45 46
1981 16.05.2025 வெள்ளிக்கிழமை

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை வெற்றி வாரம் 2631 சீட்டிழுப்பு திகதி 2025.05.16
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ.54,739,380.00
03 12 25 37 L
106654

## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு
- ஐஸ்கிறீம், கேக் தயாரிப்பவர்கள்
- உணவு பரிமாறுபவர்கள் (waiters)
- சமையல் உதவியாளர்
- பூங்கன்று பராமரிப்பாளர்கள்
- துப்பரவுப் பணியாளர்கள்

தேவை.
ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள் (C-2983)

தொடர்பு : 077 729 2840

## வேலைக்கு ஆட்கள் தேவை

பெண்கள் மட்டும் வேலை செய்யும் காலை உணவு தயாரிப்பு நிலையத்திற்கு தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய பெண் உதவியாளர்கள் தேவை.
அனுபவம் தேவை இல்லை. (C-2977)

தொடர்புகளுக்கு : 077 625 6361

## வேலையாட்கள் தேவை

- மேசன் - Rs. 3000.00 - 3500.00
- மேசன் உதவியாளர் - Rs. 2500.00 - 2700.00
- வெல்டர் - Rs. 3000.00 - 3500.00
- தச்சு வேலை - Rs. 3000.00 - 3500.00
- பெயின்ரர் - Rs. 2500.00

(தேவையேற்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.) (4174)

யாழ்ப்பாணம் 077 724 5399 (காலை 8.00 - மாலை 6.00 வரை)

## மர தளபாட உற்பத்தியாளர்களுக்கு

சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட தச்சுவேலை மெசின் (Wood working Machine) "Lida" ஒரிஜினல் 12" மற்றும் 10" Sliding இணைப்புடன் இப்பொழுது எம்மிடம். இதை ஒத்த போலிகள் தரம் குறைந்த மோட்டாருடன் சந்தையில் ஏமாந்து விடாதீர்.

"நாங்கள் உங்களோடு"



ஆர்க் .என். கம்பனி
- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

(4306)

Hotline: 071 535 7799 / 071 535 7803

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சி, முல்லைத்தீவில் சிறுவர் இல்லத்திற்கு பெண் பராமரிப்பாளர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

071 535 4504
071 535 4500

(1137)

## PREGNANCY VOUCHER

கர்ப்பிணித் தாய்மாருக்கான Voucher இற்குரிய பொருட்களை இப்போது Happy Super market உரும்பிராயில் கொள்வனவு செய்யலாம். (வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் - பதிவுள்ளோர் மட்டும்) (1140)

Happy Super Market - உரும்பிராய்
077 780 8030

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Restaurantற்கு வேலையாட்கள் தேவை (C-2982)

076 830 3931

## Village Hotel
### Bus Booking (A/C Bus)

- பருத்தித்துறை → கொழும்பு
- யாழ்ப்பாணம் → கொழும்பு

இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக
www.villagehotel.lk (3992)
077 544 8503

## கனடா - வரி இல்லாமல்
### விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3970/- |
| 11-16 Kg | 2800/- |
| 21-30 Kg | 2640/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/- | Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 / 076 822 6237 (C-2984)

## சுத்தமான , சுகாதாரமான முறையில் பறிக்கப்பட்ட தரமான வேப்பம்பூ கொள்வனவு செய்யப்படும்

கொள்வனவு விலை 1 Kg - 400/-

தேவைப்படும் அளவு 100 Kg



மொத்தமாகவோ அல்லது சிறு அளவிலோ கொள்வனவு செய்யப்படும் (C-2984)

தொடர்புகளுக்கு : 077 590 2467

## காணி விற்பனைக்கு

வடமராட்சி மந்திகை சிலையடிப் பகுதியில் பிரதான வீதியுடன் கூடிய 10 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
பகுதிகளாகவும் பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
077 500 2162 (1136)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

# மரண அறிவித்தல்

பிறப்பு 1961 - 05 - 22



இறப்பு 2025 - 05 - 16

## ஐயன் மகேந்திரன்

(ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர் - மின் பாவனையாளர் சேவை நிலையம் - யாழ் நகர் பகுதி)

யாழ்ப்பாணம் மடம் வீதியினைப் பிறப்பிடமாகவும் ஸ்ரீ முத்து மாரியம்மன் லேன், கலாசாலை வீதி திருநெல்வேலியை வசிப் பிடமாகவும் கொண்ட ஐயன் மகேந்திரன் அவர்கள் 16.05.2025 வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயன் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வல்லியப்பன் - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும் கைலாயதேவியின் அன்புக் கணவரும் பிரசன்னா(மின்சாரசபை), சிதுபா, தனுபா(சுவிஸ்), கிருசாந்தன்(மின்சாரசபை), கயூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் துஷாரா, கஜன்(கனடா), றொஷான்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தேவகி, கௌசிகன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் டிருகேஷ், ரிதுக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரீ முத்துமாரி அம்மன் லேன்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (4303)

தகவல் : குடும்பத்தினர்
077 2055 771

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 219/= | Max 10Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 258/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 420/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg கீரி சம்பா அரிசி | - 260/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் (உள்நாடு) | - 217/= | |
| 1Kg கடலை | - 405/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 217/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 245/= | |
| 1Kg அரிசிமா | - 265/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 265/= | |
| 750ml NewVSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |
| 01 லங்கா கறிசோயா | - 115/= | ~~140/=~~ |

400g Anchor 1040/= ~~1100/=~~



1Kg சன்லைட் பவுடர் 280/= ~~320/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (1139)

Happy Supermarket
0777 8080 30

## காணி வீடு விற்பனைக்குண்டு

யாழ். அளவெட்டி பெரிய சங்கத்தானை சந்தியில் இருந்து 100m தூரத்திலும் A.M.A கல்வி நிலையத்தில் இருந்து 50m தூரத்திலும் நல்ல நீர்க் கிணறு, வருமானங்களும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. குடியிருப்புச் சூழல்.
காணியின் பரப்பு - 5 பரப்பு

தொடர்புகளுக்கு:
076 755 8606
077 638 5683 (4301)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.